# பொருளடக்கம்


| | | பக்கம் : |
|---|---|---|
| 1. | உலமாக்களைப் பற்றி சில வரிகள் | 6 |
| 2. | உலமாக்களே! உடலை உரமாக்குவோம் | 7 |
| 3. | ஆலிம்களை அறிந்து கொள்ளுங்கள் | 17 |
| 4. | உலமாக்களைப் பற்றி குர்ஆன் | 21 |
| 5. | உலமாக்களைப் பற்றி ஹதீஸ் | 23 |
| 6. | அறிந்தவர்களும் அறியாதவர்களும் சமமாவார்களா? | 32 |
| 7. | உலமாக்களின் அந்தஸ்து | 35 |
| 8. | உலமாக்களிடம் கேளுங்கள் | 37 |
| 9. | அல்லாஹ்வை அஞ்சும் ஆலிம்கள் | 45 |
| 10. | உலமாக்கள் நபிமார்களின் வாரிசுகள் | 48 |
| 11. | உலமாக்களை கண்ணியப்படுத்துங்கள் | 50 |
| 12. | உலமாக்களின் ஷபாஅத் | 52 |
| 13. | மக்களில் கொடையாளி யார்? | 55 |
| 14. | நபிமார்களின் அந்தஸ்து பெற்றவர்கள் யார்? | 56 |
| 15. | உலமாக்களின் முகத்தைப் பார்ப்பது இபாதத்து | 59 |
| 16. | இஸ்லாமிய சமூகத்தின் இதயங்கள் | 60 |
| 17. | உலமாக்களை நேசியுங்கள் | 61 |
| 18. | ஆபிதை விட ஆலிம்களுக்கு ஏன் சிறப்பு? | 63 |
| 19. | உலமாக்களின் தூக்கம் ஓர் இபாதத்து | 65 |
| 20. | ஆலிம்களின் எழுத்தின் மகத்துவம் | 67 |
| 21. | உலமாக்களின் தனிச்சிறப்புகள் | 69 |
| 22. | உலமாக்களின் வீரம் | 73 |
| 23. | ஆலிம்களை அவமதிக்காதீர்கள் | 79 |
| 24. | உலமாக்களை மதியுங்கள், உண்மை முஸ்லிம்களாக திகழுங்கள் | 83 |
| 25. | சமுதாயம் சிந்திக்க வேண்டும் | 85 |

## "உலமாக்களைப் பற்றி சில வரிகள்"

"உலமாக்கள் நபிமார்களின் வாரிசுகள்" என்று அண்ணல் பெருமானார் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளினார்கள்.

நபிபெருமானார் (ஸல்) அவர்களின் சத்திய போதனைகளை நித்தமும் நெஞ்சிலேற்றி வற்றாத ஜீவ ஊற்றான ஞான இல்முகளை தங்களது மனதிலே தாங்கி சமுதாய மக்களுக்கு பயனளிப்பதற்காக இவ்வுலகிலே அயராது பாடுபட்டுக் கொண்டே வீரநடைபோடும் சத்திய சீலர்கள்தாம் உலமாக்கள். உலக ஆட்சி அதிகாரத்திற்கு எல்லாம் கொஞ்சமும் தலைகுனியமாட்டார்கள். சத்தியத்தை எடுத்து சொல்வது தான் தம் இலட்சியம் என்று கருதினார்கள். உலக பொருட்கள் உலமாக்களை ஒன்றும் செய்ய முடியவில்லை. வழிகாட்டும் உத்தமர்களாக உலகிலே நபிமார்களின் வாரிசுகளாக தன் இலட்சியப் பாதையில் கண்ணும் கருத்துமாய் இருக்கும் அந்த சத்திய உலமாப் பெருமக்களுக்கு இறைவன் எண்ணற்ற பேறுகளை மறுமையில் தயாரித்து வைத்துள்ளான்.

அத்தகைய சத்திய உலமாப் பெருமக்களின் சிறப்புகளையும், மாண்புகளையும் பற்றி அல்லாஹ்வும், அவனின் அருமைத் தூதர் நபி பெருமானார் (ஸல்) அவர்களும் போற்றிக் கூறி இருக்கிறார்கள்.

காலத்தின் கலங்கரை விளக்குகளாக அமைந்திருக்கும்; தீனின் அஸ்திவாரமாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் புனித உலமாக்களின் சிறப்புகளை இந்நூல் தெள்ளத் தெளிவாக எடுத்துக் கூறுகிறது.

உலமாக்களின் உயரிய சிறப்புகளை இந்த உலகம் இன்னும் சரிவர அறியவில்லை என்றுதான் தோன்றுகிறது. இன்று நபிமார்களின் புனித வாரிசுகளான சத்திய உலமாக்களுக்கு கொடுக்க வேண்டிய கண்ணியம் கொடுக்கப்படுவதில்லை. காரணம்! உலமாக்களைப் பற்றி சரிவர புரியாததின் அறியாமை என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

ஆகவே, சத்திய உத்தம உலமாப் பெருமக்களின் உயரிய அந்தஸ்துகளையும், சிறப்புகளையும் இனி ஆராய்வோம். நபி வழி நடப்போம்! உலமாக்கள் சொல் கேட்போம்.

சத்திய இஸ்லாத்தைக் காப்போம்.

வாருங்கள்!

## "உலமாக்களே!"
## உடலை உரமாக்குவோம்

பன்னூல் ஆசிரியர் ஆலிம் கவிஞர்

மௌலானா மௌலவி K. A. நிஜாமுத்தீன் (மன்பயீ)

(1) ஆலிம்கள் ஒன்றாக இணைவோம்-இந்த
அவனிக்கு அருள் சேர்க்க முனைவோம்.
போலிகள் இல்லாமல் செய்வோம்-மறை
போதனை உலகெங்கும் சொல்வோம்.
நூலிழை போலிணைந்து வாழ்வோம்-தூய
நூலாடை போல் தீமை தவிர்ப்போம்.
வேலியாய் நின்றிந்த தீனில்-தீய
வேற்றுமை நுழையாமல் காப்போம்!

(2) நபிமாரின் வாரிசுகள் என்போம்-தீனின்
நலமான பணி செய்ய உழைப்போம்.
அபிமானம் தனைப்பெற்று வாழ்வோம்-மக்கள்
அமைதிக்கு வழி தேடி உழைப்போம்.
சுபிட்சங்கள் பெற வேண்டி நிற்போம்-என்றும்
சுகமாகும் செல்வங்கள் சேர்ப்போம்.
நபிநாதர் நவில்கின்ற முறைபோல்-நல்ல
நெறி செய்யும் குறியாய் வாழ்வோம்!

(3) அருளான பொருள் பெற்று வாழ-மக்கள்
அழகான தீனின்பம் காண,
கருவான குர்ஆனின் வழியில்-மக்கள்
கடக்கின்ற வழிகாட்டி யாவோம்.
இருள் நீக்கும் ஒளியாக அமைந்து-மக்கள்
இதயத்தில் இறை ஞானம் வளர்ப்போம்.
அருள் வாழ்வு பெறவேண்டி உழைத்து-என்றும்
அழியாத சேவைகள் புரிவோம்!

(4) கற்றதன் பலனீந்து வாழ்வோம்-அந்தக்
கடமைக்கு உயிரீந்து மகிழ்வோம்.
ஒற்றுமை பாலமாய் அமைவோம்-ஞான
ஒளியூறும் வழிகாட்டி உயர்வோம்.

சிற்றெரும் பெனப்பணி செய்வோம்-நல்ல
சிந்தனை தனைஅதில் கொள்வோம்.
நற்றவம் நல்லறம் புரிவோம்-அந்த
நன்மையைப் புவிபெற உழைப்போம்!

(5) உலமாக்கள் மாநாடு தன்னில்-நீதி
உருவாகும் வழிகாண வேண்டும்.
பலபாதை எனும் பிரிவு நீங்கி-தீனின்.
பலமான வழிகொள்ள வேண்டும்.
சிலகாலம் வாழ்கின்ற உடலை-தீனின்
செழுமைக்கு உரமாக்க வேண்டும்.
நலமான வழிகாட்டி நின்று-தூய
நபிமாரின் வாரிசாக வேண்டும்!!!

வஸ்ஸலாம்.

நன்றி:- தமிழ்நாடு மாநில ஜமாஅத்துல் உலமா
5-வது மாநில மாநாட்டு சிறப்பு மலர்.

---

## "உலமாக்களின் சிறப்புகள்" என்ற நூலுக்கு ஆதாரமாக எடுக்கப்பட்ட நூல்கள் விவரம் :

1. குர்ஆன் மஜீது, 2. தப்ஸீர் காஜின், 3. தப்ஸீர் ஸாவி, 4. தப்ஸீர் ரூஹுல் பயான், 5. தப்ஸீர் ஜலாலைன், 6. புகாரி, 7. முஸ்லிம், 8. அபூதாவூது, 9. திர்மிதி, 10. நஸாயி, 11. இப்னு மாஜா, 12. தப்ரானி, 13. இஹ்யா உலூமித்தீன், 14. தன்பீஹுல் காபிலின், 15. நவாதிர் கல்யூபி, 16. முனப்பஹாத், 17. முஹிம்மாத்துல் முதஅல்லிமீன், 18. அஹ்ஸனுல் மவாலிஹ், 19. மின்ஹாஜில் ஆபிதீன், 20. முன்னேரின் கலைத் தொண்டு, 21. நுஜீஹத்துல் மஜாலிஸ், 22. துர்ரத்து நாஸிஹின், 23. இஸ்லாமிய கலைக்களஞ்சியம், 24. தக்காயிக்குல் அஹ்பார் 25. துர்ரதுல் வாயீளின், 26. ரவ்வனகுல் மஜாலிஸ், 27. மிர்காத்துல் குலூப், 28. முன்தஹல் மவாயிஜ், 29. ஹயாத்துல் ஹயவான், 30. மிஷ்காத் மஸாபீஹ், 31. முஸ்தத்ரப், மற்றும் பல நூல்கள். அனைத்துக்கும்

நன்றி ! நன்றி !! நன்றி !!!

---

# 3. ஆலிம்களை அறிந்துகொள்ளுங்கள்

மானிட வர்க்கங்களுக்கு வழி காட்டிகளாக உலகில் உதித்தவர்கள்தாம் உத்தம உலமாக்கள். இஸ்லாத்தின் முதுகெலும்புகளாக, காலத்தின் கலங்கரை விளக்குகளாக திகழ்பவர்கள்தாம் நமது உலமா பெருமக்கள். இறைவனே தனது அருள் மறையாம் திருமறையில் இந்த சத்திய உத்தம உலமாப் பெருமக்களைப் பற்றி தெளிவாக புகழ்ந்து கூறியுள்ளான்.

மேலும் நானிலம் காக்க வந்த நபிபெருமானார் (ஸல்) அவர்கள் புனிதர்களான வீர உலமாக்களைப் பற்றி பலவகையில் எடுத்துக் கூறி புகழ் மாலை சூட்டியுள்ளார்கள். விஷயம் இப்படி இருக்க இன்று சிலமார்க்க அறிவில்லாத அரைகுறை பாமரர்கள் உலமாக்களுக்கு கொடுக்க வேண்டிய மதிப்பை-கண்ணியத்தைகொடுக்காமல் தர்கித்து திரிகின்றார்கள். இனி அவர்களின் கூற்றுக்களைப் பார்ப்போம்: ''ஆலிம்கள் என்றால் உலகில் உள்ள அனைத்து முஸ்லிம்களும் ஆலிம்கள்தாம். அலிப், பே,தெரிந்தவர்கள் கூட ஆலிம்கள்,உலமாக்கள்தாம். 7, 8 வருடம் மதரஸாவில் ஓதி வருபவர்கள் மட்டுமே ஆலிம்கள் என்று சொல்ல உரிமைகிடையாது' என்று விளக்கமில்லாமல் உளறித் திரிகிறார்கள். நாம் சொல்வோம்:- உங்கள் கூற்றுப்படி உலகில் உள்ளவர்கள் அனைவரும் ஆலிம்கள் என்றால், அல்லாஹ்வும், அவனது ரசூலும் குறிப்பாக உலமாக்களை சாதாரண மனிதர்களைவிட்டும் பிரித்து காட்டி புகழ்ந்துரைத்துள்ளார்களே! அக்கூற்றை உங்களால் மறுக்க முடியுமா?

நபிமார்களுக்கு அடுத்ததாக சிபாரிசு செய்யும் தகுதி உலமாப் பெருமக்களுக்குத்தான் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்களே! இதை எப்படி மறுக்க முடியும்! இன்னும் எத்தனையோ பல ஆதாரங்களிலிருந்து மனிதர்களை விட உல

மாப் பெருமக்கள்தான் சிறந்தவர்கள் என்பதை ஹதீஸின் கூற்றுபடி நாங்கள் ஆதாரம் காட்டமுடியும்! உங்களால் முடியாது முடியவே முடியாது! ஆயிரம் இபாதத்து செய்யக் கூடிய ஆபிது (வணக்கசாலி)களைவிட ஓர் ஆலிம் ஷைத் தானுக்கு அதிகம் கடினமுள்ளவராக இருக்கிறார் என்றும், ஆபிதின் வணக்கத்தைவிட ஆலிமின் தூக்கம் மிக சிறந்தது என்றும் நபி பெருமானார் (ஸல்) அவர்கள் கூறி இருப்பதி லிருந்து இரண்டு பிரிவினர் இந்த ஹதீஸில் பிரிகின்றனர்: (1) ஆலிம்கள், (2) ஆபிதுகள். இந்த இரண்டு பிரிவினர் களும் முஸ்லிம்கள்தாம். இல்மு (மார்க்கக்கல்வி) இல்லாமல் தெரிந்ததை வைத்து இபாதத்து செய்யக்கூடியவர்தான் ஆபித், இஸ்லாத்தின் உண்மை இல்மு (கல்வி)களை கற்று தேர்ந்தவர்கள்தாம் ஆலிம்கள் என்பதை இந்த ஹதீஸ் நமக்கு சுட்டிக்காட்டுகிறது. ஆகவே முஸ்லிம்கள் அனைவர் களும் ஆலிம்களாக ஆக முடியாது. மார்க்க கலைகளை கற்று தேறியவர்கள்தாம் ஆலிம்கள் என்பது புலனாகிறது.

முஸ்லிம்கள் என்றால் மார்க்கத்தைப் பற்றி சிறிதாகிலும் தெரிந்திருக்கத்தான் வேண்டும். மார்க்க கல்வியைக் கற்பது முஸ்லிமான ஆண், பெண் இரு பாலாருக்கும் கட்டாய கடமை என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். இன்று எல்லா முஸ்லிம்களுமா மார்க்க கலைகள் அனைத்தையும் கற் கின்றார்கள். இல்லை, அறவே இல்லை. ஆகவே மார்க்கத்தில் சில விஷயங்களை தெரிந்ததால் மட்டும் ஆலிமாக முடியாது. உயர உயர பறந்தாலும் ஊர்க் குருவி பருந்தாக முடியாது. ஆலிம்கள்என்றால் மார்க்கக் கல்வியில் நன்கு தேர்ச்சி பெற்று அரபிக் கலைகளை நன்கு அறிந்தவர்களாக இருக்கவேண்டும். வெறும் அலிப், பே (ஆரம்பக்கல்வி) தெரிந்தால் மட்டும் போதாது.இதோ பாருங்கள் உலமாக்கள் என்பவர்கள் யார்? என்பதை: உலகில் எத்தனையோ கல்விகள் இருக்கின்றன. ஆனால் அந்தஅனைத்து கல்விக்கும் தாயாக அரபி கல்விதான் உலகில் ஒளிவிட்டு பிரகாசிக்கின்றது. உலகில் சிறந்த மொழி அரபிதான் என்பதை யாராலும் மறுக்க மறக்க மறைக்க முடி யாது. அரபிமொழியின் சிறப்பை பற்றி அருமை பெருமானார் (ஸல்) அவர்கள் கூறும்பொழுது: மூன்று காரணங்களுக்காக அரபி மொழியை நான் நேசிக்கிறேன்.(1) குர்ஆன் இறக்கப்



பட்டது அரபிமொழியில்தான். (2) நான் அரபியாக உள் ளேன். (3) சுவனத்தில் பேசப்படும் மொழி அரபியே என்று கூறினார்கள்.

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி)
ஆதாரம் நூல்: பைஹக்கி

இத்தகைய சிறப்பு வாய்ந்த அரபிமொழி 48 கலைகளாக அமைந்துள்ளது. 48 கலைகளையும் கற்று தேர்ச்சி பெற்றவர் கள்தான் உலமாக்கள். 48 கலைகளையும் விளக்கினால் நூல் விரிவை அஞ்சி சில கலைகளை மட்டும் அதன் பொருளுடன் விளக்குகின்றேன்.

தப்ஸீர்-திருமறை விரிவுரை
ஹதீஸ்-நாயக வாழ்வும் வாக்கும்

உஸூலே ஹதீஸ்-நாயக வாழ்வும் வாக்கும் ஆகிய வற்றின் ஆதாரங்கள்.

கிராஅத்-திருமறை ஓதும் கலை
பிக்ஹ் பராயீன்-சட்ட இயல் பாக பிரிவினை
உஸூலே பிக்ஹ்-சட்ட இயல் அடிப்படைகள்
ஹிக்மத்தே இலாஹிய்யாத்-தத்துவ சாத்திரம்
அகாயித்-உறுதிக் கோட்பாடுகள்
ஹிக்ம(த்)தே தபஇய்யாத்-இயற்பொருள் சாத்திரம்
சீரத்-வாழ்க்கை வரலாறு
தாரீக்-வரலாறு
மஆனி-அணியிலக்கணம்
ஸர்ப்-சொல்லிலக்கணம்
நஹ்வு-சொற்றொடரியல்
அதப்-இலக்கியம்
மன்திக்-தருக்கம் (அளவை)
அருஜ்-யாப்பிலக்கணம்

ஜுக்ராபிய்யா-பூமி சாத்திரம்
முனாழரா-விவாத சாத்திரம்
ஹைஅத்-வான சாத்திரம்
ஹந்தசா-க்ஷேத்திரக் கணிதம் (வடிவியல்)
ஹிசாப்-கணிதம்
தஸவ்வுப்-மெய்ஞானம்
இன்ஷாஃ-கட்டுரை வரைதல்
பயான்-பேச்சுக்கலை

பார்த்தீர்களா? மேற்கூறப்பட்ட கலைகளை கற்றும் இவை அல்லாத பல ஞானக் கலைகளையும் கற்றவர்கள்தாம் நமது உலமாக்கள். இப்படி இருக்க எப்படி உலகமக்கள் அனைவர்களும் ஆலிம்களாக ஆக முடியும்? அல்லாஹ் தனது அருள் மறையாம் புனித குர்ஆனிலே கூறுவதைப் பாருங்கள்:

''அறிந்தவர்களும், அறியாதவர்களும் சமமாவார்களா? நபியே! நீங்கள் சொல்லுங்கள்!''-சூரா ஸீமர் வ 9 (அல்குர்ஆன்)

ஒவ்வொரு காலங்களிலும் சூழ்நிலைக்கு தகுந்த வண்ணம் உலமா பெருமக்கள் உலகில் தோன்றிக் கொண்டே இருப்பார்கள். ஆகவே நபிமார்களின் புனித வாரிசுகளாகிய உலமா பெருமக்களை கண்ணியப் படுத்துங்கள். உலகியல் வாழ்வில் (படிப்பில்) தேர்ச்சி பெற்றவர்களும் அறிஞர்கள் தான். இருந்தாலும் அவர்கள் அல்லாஹ்வும், அவனது ரசூலும் புகழ்ந்த அறிஞர்களல்ல, அவர்களின் படிப்பு உலகத்தோடு முடிந்துவிடும். உலகப் பட்டங்கள் வாங்கி இருப்பதால் அதைக் காட்டி சுவனம் செல்ல இயலாது. ஆகவே அறிஞர்கள் என்ருல், புனித இஸ்லாம் மார்க்கத்தில் தேர்ச்சி பெற்று விளங்கும் ஆலிம்கள்தான் அறிஞர்கள் என்பதை இங்கு நாம் கவனத்தில் கொண்டு, புனித நபிமார்களின் வாரிசுகள் உலமா பெருமக்கள்தாம் என்று உணர்ந்து உண்மையான கண்ணியத்தையும், அவர்களுக்கு செலுத்த வேண்டிய மரியாதையையும் செய்யவேண்டும். ஏனெனில், உல



மாக்கள் இல்லாவிட்டால் உலக மக்கள் மாக்களாக மாறி விடுவார்கள், மக்களின் தரத்தை உணர்ந்து அவ்வப்போது சீர்திருத்தம் செய்து வரும் தகுதி நமது உலமாபெருமக்களுக்குத்தான் பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது. நபிமார்கள் எந்த வேலைக்காக அனுப்பப்பட்டார்களோ, அதே புனித வேலையை நபிமார்களின் வாரிசுகளான உலமாக்கள் செய்ய கடமை பட்டுள்ளார்கள். அவர்கள் புனித சேவை நாட்டுக்கு தேவை. அவர்களை கண்ணியப்படுத்துவது சமுதாய மக்களுக்கு கட்டாய கடமை என்பதை உணர்ந்து செயல்படுமாறு மிகமிக தாழ்மையுடன் சமுதாய பொதுமக்களிடம் கேட்டுக் கொள்கிருேம்.

வல்ல இறைவா! உன் நேசர்களான உலமா பெருமக்களுக்கு உன் புறத்திலிருந்து உரிய கூலியை அளித்து இரு உலகிலும் அவர்களை கண்ணியப்படுத்துவாயாக.

ஆமீன், ஆமீன், யாரப்பல் ஆலமீன்.

★

# 4. உலமாக்களைப் பற்றி குர்ஆன்

உலமாக்களைப் பற்றி தித்திக்கும் திருமறை அல்குர்ஆன் எடுத்தியம்பும் மணிமொழிகளை கீழே தந்துள்ளோம்:

1. உங்களில் விசுவாசங் கொண்டவர்களுக்கும் மார்க்க ஞானம் கொடுக்கப்பட்டவர்களுக்கும் இறைவன் பல (தரஜா) அந்தஸ்துகளை உயர்த்துகிருன்.

2. நபியே! அறிந்தவர்களும், அறியாதவர்களும் சமமாவார்களா? என (மக்களிடம்) கேட்பீராக,

3. அல்லாஹ்வைத் தவிர வேறு நாயன் இல்லை என்று அல்லாஹ்வும், அவனது அமரர்களும், இன்னும் நீதத்தைக் கொண்டு நிலை நாட்டும் கல்விமான்களும், சாட்சி பகர்கின்றனர்கள்.

4. நபியே! நீங்கள் சொல்லுங்கள் சாட்சியால் எனக்கும் உங்களுக்கும் மத்தியில் அல்லாஹ் போதுமானவனாகி விட்டான். இன்னும் யாரிடத்தில் வேதத்தின் விளக்கம் இருக்கிறதோ அவர்களும் போதுமாகி விட்டார்கள்.

5. கல்வி கொடுக்கப்பட்டவர் சொல்வார் உங்களுக்கு நாசமுண்டாகட்டும். அல்லாஹ்வின் கூலி ஈமான் கொண்டு நல்அமல் புரிந்தவர்களுக்கு சிறந்ததாக இருக்கும் என்று.

6. (சிலந்தி வலை) இந்த உதாரணத்தை நாம் மக்களுக்கு ஆக்கி இருக்கின்றோம். இதை அறிவாளிகளைத் தவிர சிந்திக்க மாட்டார்கள்.

7. யார் இடத்தில் வேதத்தில் நின்றுமுள்ள விளக்கம் இருக்கின்றதோ அவர் கேட்டார். அதை (சிம்மாசனத்தை) உங்களிடம் கொண்டு வருகிறேன் என்று.

8. அவர்களில் ஒவ்வொரு பிரிவினரிலும் மார்க்கவியலில் (உள்ள கலை கலாச்சாரங்களை) விளக்கி கொள்ள ஆவன செய்யவில்லையென்றால்!... நீங்கள் அறியாத பாமரர்களாக இருந்தால் அறிஞர் பெருமக்களிடம் (ஆலிம்கள்) கேளுங்கள்.

9. உங்களினின்றும் ஈமான் கொண்டவர்களையும், இன்னும் இல்மை கொடுக்கப்பட்டவர்களையும் அந்தஸ்த்தால் உயர்த்துகிறான்.

10. இறைவனின் அடியார்களில் அல்லாஹ்வுக்கு அஞ்சுபவர் மார்க்க விற்பன்னர்கள் (உலமாக்கள்) தாம்.

★

# 5. உலமாக்களைப் பற்றி ஹதீஸ்

காலத்தின் கலங்கரை விளக்குகளாக திகழும் உத்தம உலமாக்களைப் பற்றி அல்ஹதீஸில் வந்துள்ளவற்றை காண்போம்:

1. எவருக்கு இறைவன் நலவை நாடுகிறானோ அவருக்கு மார்க்க விஷயத்தில் விளக்கத்தைக் கொடுக்கிறான்.

2. எனது உம்மத் (சமுதாயத்) திலுள்ள அறிஞர்கள் பனி இஸ்ராயீலர்களின் நபிமார்களைப் போலாவார்கள்.

3. எவர் ஓர் ஆலிமை வரவேற்கிறாரோ அவர் என்னை வரவேற்கிறார். எவர் ஓர் ஆலிமை சந்திக்கிறாரோ, அவர் என்னை சந்திக்கிறவராவார். எவர் ஓர் ஆலிமிடம் அமர்கிறாரோ, அவர் என்னிடம் அமர்கிறார். எவர் என்னிடம் அமர்ந்தாரோ, அவர் அல்லாஹ்விடம் அமர்ந்தவராகிறார்.

4. அறிஞர்கள் இல்லையெனில் மக்களெல்லாம், மாக்களாக மாறி விடுவார்கள். நிச்சயமாக ஆலிம்கள் அம்மக்களை மாக்கள் தன்மையை விட்டும் வெளிப்படுத்தி மக்கள் தன்மைக்கு கொண்டு வருகின்றார்கள்.

5. மறுமையில் நபிமார்கள் அதற்கடுத்தபடி உலமாக்கள் அதன்பின் ஷுஹதாக்கள் ஆகிய மூவர்க்கத்தினரும் அவர்கள் நாடியவர்களுக்கு அல்லாஹ்விடம் ''ஷபாஅத்'' செய்வார்கள் என்று நபி பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

6. உலமாக்களை கண்ணியப்படுத்துங்கள். ஏனெனில் அவர்கள் நபிமார்களின் வாரிசுக்காரர்களாக இருக்கிறார்கள்.

7. எவர்கள் உலமாக்களை கண்ணியப்படுத்துகிறார்களோ, அவர்கள் உண்மையில் அல்லாஹ்வை கண்ணியப்படுத்தியவர்களாவார்கள்.

8. எவர் ஓர் ஆலிமைகண்ணியப்படுத்துகிருரோ அவர் உண்மையில் எழுபது நபிமார்களை கண்ணியப்படுத்தியவரைப் போலாவார்.

9. எவர் ஆலிம்களை நேசிக்கின்ருரோ, அவருடைய ஜீவிய காலத்திலேற்படும் சிறு பாவங்கள் பட்டோலையில் எழுதப்படமாட்டாது.

10. எவர் உலமாக்களை கண்ணியப்படுத்துகின்ருரோ, அவர் அல்லாஹ்வை கண்ணியப்படுத்தியவராவார், எவர் அல்லாஹ்வை கண்ணியப்படுத்துகிருரோ அவரின் இருப்பிடம் சுவனமாகும்.

11. ஓர் ஆலிமுக்கு நீர் சலாம் சொல்வது 1000 வருடம் வணங்குவதை விட உமக்கு சிறந்ததாகும்.

12. ஓர் ஆலிமுடைய முகத்தைப் பார்ப்பது அல்லாஹ்வின் பாதையில் 1000 குதிரைகளை தர்மம் செய்வதை விட சிறந்தது.

13. ஓர் ஆலிமின் முகத்தைப் பார்ப்பது இபாதத்தாகும்.

14. ஒரு பகீஹ் (சட்ட ஞானியான ஆலிம்) ஷைத்தானின் மீது பேணுதலுள்ள ஆயிரம் வணக்கஸ்தர்களைவிட மிக கடினமானவராக இருக்கிருர் என நபி (ஸல்) சொன்ஞர்கள்.

15. ஆபிதின் மீது ஆலிமின் சிறப்பாகிறது, உம்மத்தின் மீது நபியின் சிறப்பை போன்றிருக்கிறது.

16. ஓர் ஆலிமின் முகத்தைப் பார்த்து சந்தோஷப்பட்டால் அல்லாஹ் அந்தப் பார்வைக்கும், சந்தோஷப்பட்டதற்கும் ஒரு மலக்கைப் படைத்துவிடுவான். கியாமத் நாள் வரை அம்மலக்கு அம்மனிதனுக்கு பாவமன்னிப்பு தேடி கொண்டிருக்கிருர்.



17. ஓர் ஆலிமின் தூக்கமாகிறது ஜாஹிலு (அறியாதவன்) டைய வணக்கத்தைவிட சிறந்ததாகும்.

18. யார் ஓர் ஆலிமிடம் முஸாபஹா செய்கின்ருரோ, அவர் என்னை முஸாபஹா செய்தவரைப் போலாவார் என அருமை நபி பெருமானர் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

19. உலமாக்களுக்காக வேண்டி கடலில் உள்ள மீன் மச்சங்கள் வானம், பூமியில் உள்ள அனைத்தும் பாவமன்னிப்பு கேட்கின்றன.

20. ஒருவர் ஓர் ஆலிமிடம் இரண்டு நொடி நேரம் உட்கார்ந்திருந்தால் அல்லது இரண்டு பிடி உட்கார்ந்து சாப்பிட்டால் அல்லது இரண்டு வார்த்தை பேசினல் அல்லது இரண்டு அடி அவருடன் நடந்து வந்தால் அல்லாஹு தஆலா அவருக்கு இரண்டு பூங்காவனத்தை தருகிருன். (மொத்தம் 4-துன்யா) கிடைக்கிறது.

21. உலமாக்களுக்கு, முஃமின்களின் அந்தஸ்தைவிட 700 (ஏழுநூறு) மடங்கு அந்தஸ்து அதிகமானது. ஓர் ஆலிமுக்கும் சாதாரண மனிதனுக்கும் உள்ள ஓர் அந்தஸ்தின் தொலை தூரம் 500 (ஐநூறு) வருஷத்தின் தூரமாக இருக்கும்.

22. ஒரு நாள் ஹஸ்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்களிடம் நபிபெருமானர் (ஸல்) அவர்கள் ஆலிமின் சிறப்பைப் பற்றிக் கேட்டார்கள். துன்யாவிலும், ஆகிரத்திலும் உங்கள் உம்மத்திற்கு உலமாக்கள் விளக்குகளாக இருப்பார்கள். எனவே யார் அவர்களை அனுசரித்து அணைத்துக் கொண்டார்களோ, அவர்களுக்கு சுபசோபனம் உண்டாகட்டும். யார் அவர்களை வெறுத்து கோபித்துக் கொண்டார்களோ, அவர்களுக்கு கேடுதான் என ஜிப்ரயீல் (அலை)அவர்கள் திருவாய் மலர்ந்தருளினர்கள்.

23. ஓர் ஆலிமின் சிறப்பு அல்லாஹ்விடத்தில் (1000) ஆயிரம் ஷஹீதுகளைவிட சிறப்பாக இருக்கும் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

24. அல்லாஹுதஆலா அர்ஷுக்கு கீழ் ஒரு பட்டணம் படைத்து உள்ளான். அதில் யார் உலமாக்களை சந்திக்கிறார்களோ, அவர்கள் நபிமார்களை சந்திக்கிறவரைப் போலாவார் என எழுதி உள்ளான்.

25. ஓர் ஆலிமிடம் ஒரு நிமிடம் உட்காருவது, ஆயிரம் வருடம் இபாதத்து செய்வதைவிட சிறப்பானதாகும் என நபி பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

26. ஓர் ஆலிம் இறந்து போனதற்காக ஒரு மனிதர் கவலைப்பட்டால் அந்த முஃமினுக்கு 1000 ஆலிம்கள், 1000 ஷஹீதுகள் உடைய அந்தஸ்த்தை அல்லாஹ் கொடுக்கின்றான்.

27. ஓர் ஆலிமின் மௌத்து அகிலத்தின் மௌத்து.

28. ஆலிமாக இரு, அல்லது கற்று கொடுப்பவனாக இரு, அல்லது கேட்பவனாக இரு. நான்காவதாக இருக்காதே, அப்படி இருந்தால் அழிந்து விடுவாய்.

29. கியாமத்து நாளில் ஷுஹதாக்களுடைய இரத்தத்துளிகளும் உலமாக்களின் பேனா மைத் துளிகளும் நிறுக்கப்படும். அப்பொழுது உலமாக்களின் பேனா மைத்துளி கனமாக இருக்கும்.

30. திட்டவட்டமாக அல்லாஹ்வும், அவனது மலக்குகளும், எந்த அளவு என்றால், புற்றில் உள்ள எறும்புகள் உள்பட உலமாக்கள் மீது நல்ல துஆ செய்கின்றன.

31. ஓர் ஆலிம் நபிதான், ஆனால் அவருக்கு வஹி வருவதில்லை என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.



32. இரண்டு வஸ்துவிலே தவிர பொறுமை என்பது கிடையாது:

1. ஒரு மனிதனுக்கு அதிகமான இல்மைக் கொடுத்திருக்கிறான். அதை அவர் மக்களுக்கு பயனளிக்குமாறு செய்து கொண்டிருக்கிறார். 2. ஒரு மனிதனுக்கு அதிகமான பொருள் கொடுக்கப்பட்டு அதை அவர் மக்களுக்கு பயன் அளிக்கும் நல்ல வழியில் செலவழித்து கொண்டிருக்கிறார். (இந்த இரண்டு பேர்களைப் பார்த்து பொறுமைப் படலாம்)

33. உலகமும், உலகத்திலுள்ள அனைத்துப் பொருட்களும் சபிக்கப்பட்டவை, இறைவனின் திக்ரையும், அல்லாஹ்விற்கு கட்டுப்பட்டு மற்றவர்களுக்கு கற்றுக்கொடுக்கும் ஆலிமைத் தவிர.

34. ஆபிதைவிட ஆலிமின் சிறப்பாகிறது, உங்களில் தாழ்ந்தோர்களில் என்னுடைய சிறப்பைப் போல என நபி பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

35. ஆபிதைவிட ஆலிமின் சிறப்பாகிறது, (வானத்தில் மின்னும்) எல்லா நட்சத்திரங்களைவிட சந்திரனின் சிறப்பைப் போன்றதாகும்.

36. உலமாக்கள் நபிமார்களின் வாரிசுக்காரர்கள். ஏனெனில் நபிமார்கள் தீனாரையும், திர்கத்தையும் வாரிசாக ஆக்கி செல்லவில்லை. அவர்கள் வாரிசாக ஆக்கி சென்றது இல்மைத்தான். யார் அந்த இல்மை எடுத்துக்கொண்டாரோ அவர் நிரந்தரமான (ஏராளமான) பங்கை எடுத்தவராகிறார்.

37. உலமாக்களைக் கைப்பற்றுவதைக் கொண்டுதான் இறைவன் உலகில் இல்மை கைப்பற்றுவான். அப்படி ஆலிம்களைகைப்பற்றவில்லையானால் மக்கள் அறிவற்றவர்களை அரசர்களாக ஏற்றுக்கொள்வார்கள். அந்த அரசர்களிடம் மக்கள் கேள்வி கேட்பார்கள். எவ்வித இல்மும் இல்லாமல் அரசர்கள் பத்வா (மார்க்கத் தீர்ப்பு) கொடுத்து வருவார்கள். அவர்களும் வழிகெட்டு சமுதாய மக்களையும் வழி கெடுப்பார்கள்.

38. உலமாக்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அந்தஸ்தில் தாழ்ந்ததாகிறது, இந்த துன்யாவை விட சிறந்தது என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

39. முஃமினுன மக்களில் சிறந்தவர்கள் ஆலிம்கள் தான்.

40. நபிமார்களின் நுபுவத்தின் தரஜாக்களினின்றும் சிறந்தவர்கள் (நெருக்கமானவர்கள்) இல்முடைய உலமாக்கள்தான்.

41. ஓர் கூட்டத்தாரின் மௌத்தைவிட ஓர் ஆலிமின் மௌத்து பேரிழப்பாகும்.

42. பூமியிலே உலமாக்கள் இறைவனின் நம்பிக்கையாளர்களாக உள்ளார்கள்.

43. ஆபிதைவிட ஆலிமின் சிறப்பாகிறது, என்னுடைய சஹாபாக்களில் ஆக தாழ்ந்தவரை விட என்னுடைய சிறப்பு எவ்வளவு உயர்ந்ததோ, அதை போலாகும் என அருமை நபி பெருமானுர் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளினுர்கள்.

44. ஷைத்தானுக்கு ஆயிரம் வணக்கஸ்தர்களைவிட ஓர் ஆலிம் மிக கடினமானவராக இருக்கிறுர்.

45. ஒவ்வொரு வஸ்துவுக்கும் ஒவ்வொரு தூண் இருக்கிறது. தீனின் தூண் பேணுதல் உள்ள உலமாக்கள்.

46. இறைவன் மறுமை நாளில் உலமாக்களையும், ஆபிதுகளையும் ஒன்ருக எழுப்புவான், அப்பொழுது உலமாக்களைப் பார்த்து, "ஓ உலமாக்களே! உங்களின் இல்மை நான் வீணுக்கவில்லை. உங்களை அதாபு (வேதனை) செய்வதற்காக இல்மை தரவில்லை. உங்களை மன்னித்து விட்டேன், சுவனத்திற்கு சொல்லுங்கள்" என்று கூறுவான் என்று அருமை பெருமானுர் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.



47. ஆலிமின் அவைதனில் அமர்ந்திருப்பது ஓராயிரம் ரகஅத்துகள் தொழுவதை விடவும், ஓராயிரம் நோயாளிகளை விசாரித்து வருவதை விடவும், ஓராயிரம் ஜனுஸாக்களில் கலந்து ஆவன செய்வதை விடவும் சிறப்புடையதாகும் என அருமை பெருமானுர் (ஸல்) அவர்கள் கூறினுர்கள். அப்போது சஹாபாக்கள் குர்ஆன் ஓதுவதை விடவும் சிறப்புடையதா? என கேட்டார்கள். அதற்கு "அறிவு இல்லாமல் குர்ஆன் பலனளிக்குமா?" என மறுமொழி பகன்ருர்கள் அருமை நபி (ஸல்) அவர்கள்.

48. இரண்டு பேராசைக்காரர்கள் வயிறு நிரம்பியவர்களாக மாட்டார்கள். (1) ஆலிம், (2) உலகை விரும்புகிறவர். ஆலிம் ஒவ்வொரு வினுடியும் அல்லாஹ்வின் திருப்தியை அதிகப்படியாக தேடிக் கொண்டிருக்கிருர். உலகை (பொருளை) விரும்புகிறவர் அதிகப்படியாக வழி கேட்டை தேடிக்கொண்டிருக்கிருர் என நபி பெருமானுர் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

49. மறுமையில் ஆலிம்கள் எழுதிய மையையும், ஷுஹதாக்களின் இரத்தத்தையும் நிறுக்கப்படும். அப்போது ஷுஹதாக்களின் இரத்தத்தை விட ஆலிம்களின் மை அதிக கனமுள்ளதாக இருக்கும்.

50. ஒவ்வொரு நாளும் இறைவன் உலகில் ஆயிரம் ரஹ்மத்துகளை இறக்குகிருன். அதில் 999 ரஹ்மத்துகளை உலமாபெருமக்கள் மீதும், பாக்கி ஒன்றை மற்ற முஃமின்களின் மீதும் இறக்குகின்ருன்.

51. ஓர் ஆலிமின் மௌத்தின் மீது யார் கவலைகொள்ளவில்லையோ அவர் முனுபிக் என அருமை நபி (ஸல்) அவர்கள் கூறினுர்கள்.

52. ஓர் ஆலிமுக்கு அல்லது ஒரு முதஅல்லிமுக்கு யார் உதவி செய்கிருரோ அது ஒரு முடக்கு தண்ணீராக இருந்தாலும் சரியே, அவர் 70-தடவை கஃபாவை கட்டிய நன்மையை அளிக்கப்படுவார் என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினுர்கள்.

53. மக்களில் புகழுக்குரியவர்கள் இரண்டு பேர்கள், ஒன்று ஆலிம், இரண்டு முதஅல்லிம் என நபி (ஸல்) அவர்கள் கூறினர்கள்.

54. "எவன் ஆலிமுக்கோ, அல்லது முதஅல்லிமுக்கோ, மைக்கூடு அல்லது பேனு அல்லது ஒரு பிடி உணவு, அல்லது ஆடையை கொண்டு உதவி செய்கின்ருனே, அவனுக்கு இந்த உலகத்திலும், கபுரிலும், கியாமத்து நாளிலும் அல்லாஹ் உதவி செய்கிருன். மிகப்பெரிய வளப்பமான அந்தஸ்தையும் பெற்றுவிட்டார்," என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

55. அமல் செய்யக்கூடிய ஆலிம் நபியுடைய அந்தஸ்தில் இருக்கிருர். கற்றுக்கொடுப்பதின் அளவில் அவரை சேர்க்கப்பட்டால்!முர்ஸலான நபியுடைய அந்தஸ்த்தில்உள்ளார். என்ருலும் ஆலிம்களுக்கும், நபிமார்களுக்கும் மத்தியில் நுபுவத்தும், ரிஸாலத்தும் வித்தியாசமாக உள்ளது என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

56. ஆலிம்களுக்கு சிறப்பு என்ற ரீதியில் 1000 ஷஹீதுகளைவிட சிறப்புடையவராக இருக்கிருர்.

57. எந்த ஒரு மனிதன் 7-நாட்களுக்கு (தொடர்ந்து) ஓர் ஆலிமை மோசடி செய்கிருனே அவன் அல்லாஹ்வை மோசடி செய்தவன் போலாகி விடுகின்ருன். அந்த ஆலிமுக்கு 7 ஆயிரம் வருஷம் அளவு மறுமையிலே நன்மை கொடுக்கப்படும். அந்த ஒவ்வொரு நாளும் மோசடி செய்யப்பட்ட ஆலிமுக்கு 1000 ஷஹுதுகளின் அந்தஸ்தைக் கொடுக்கின்ருன்.

58. என்னுடைய உம்மத்தினருக்கு ஒரு சோதனை காலம் வரும். அக்காலத்தில் மக்கள் மார்க்க அறிஞர்களின் நல்லுரைகளைக் கேட்காமல் வெகுண்டோடுவார்கள். அக்காலை அல்லாஹ் அவர்களுக்கு மூன்று வகைச் சோதனைகளை அளிப்பான். (1) வியாபாரத்தில் பரக்கத்தை நீக்கிவிடுவான். (2) நீதியில்லா ஆட்சியாளர்களைச் சாட்டி விடுவான். (3) உலகிலிருந்து ஈமான் இல்லாதவர்களாக மரணமடையச் செய்வான் என்று அருமை பெருமானர் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளினர்கள்.



59. மனிதா! அறிஞர்களை (உலமாக்களை) தேடுவதின் மூலம்தான் அறிவைத் தேடிப் பெற முடியும் என்று நபி பெருமானர் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

60. மார்க்க அறிவை தேடுகின்ற மாணவருக்கு ஒரு திர்ஹம் தருமம் வழங்குபவர், உஹது மலையளவு தங்கத்தை தருமம் செய்த பலனைப் பெறுவார்.

61. ஓர் ஆலிம் தலையணையில் சாய்ந்து கொண்டு மார்க்க சம்பந்தமான நூல்களைப் பார்ப்பதும் அதை ஆராய்வதும், ஓர் ஆபித் 70 வருடங்கள் வணக்கம் செய்வதை விட சிறந்தது.

62. ஓர் ஆலிம் மரணமாவது இரவு காலங்களில் நின்று இபாதத்து செய்து, பகல் காலங்களில் நோன்பு நோற்கும் ஆயிரம் வணக்கவாளிகள் மரணமடைவதைவிட அதிக கவலைக்கும், துக்கத்திற்கும் உரியதாகும். ஏனென்ருல் ஆயிரம் வணக்கசாலிகள் மரணமடைவது ஆயிரம் விளக்குகள் மட்டும் அணைவது போலாகும். ஆனுல் ஓர் ஆலிம் மரணிப்பது உலகில் ஒளிவீசும் சூரியன் மறைவதைப் போலாகும்.

63. உலகத்தில் மனிதர்கள் எவ்வாறு உலமாக்களிடம் தேவைப்படுகின்ருர்களோ! அவ்வாறே சுவர்க்கத்திலும் உலமாக்களிடம் தேவைப்படக்கூடியவர்களாக இருக்கின்ருர்கள். ஏனென்ருல், வல்ல இறைவன் தினந்தோறும் சொர்க்கவாசிகளிடம் உங்களுக்குத் தேவையானதைக் கேளுங்கள் கொடுக்கின்றேன் என்று அறிவிப்பான். அந்நேரத்தில் அம்மக்கள் உலமாக்களிடம் சென்று இப்போது எதைக் கேட்பது? என கேட்பார்கள். அந்நேரத்தில் உலமாக்கள் இப்போது இதைக் கேளுங்கள், அதைக் கேளுங்கள் என்று கற்றுக் கொடுப்பார்கள்.

# 6. அறிந்தவர்களும் அறியாதவர்களும் சமமாவார்களா?

"நபியே! அறிந்தவர்களும், அறியாதவர்களும் சமமாவார்களா? என (மக்களிடம்) கேட்பீராக."

(அல்குர்ஆன் 39: 9)

அகிலத்தை தன் ஆளுகைக்குள் அடக்கி ஆட்டிப் படைக்கும் வல்ல இறைவனுக்கே புகழ் அனைத்தும். அவன் நிரந்தரமானவன்-ஈடு இணையற்ற பேருபகாரன். அவனைப் போற்றுகின்றேன். அவனின் பேருளை எதிர்பார்த்து அவனின் பக்கமே மீளுகின்றேன். வல்ல இறைவன் மேற்கூறப்பட்ட தனது அருள் வசனத்திலே... அருமை பெருமானார், அகிலத்தின் ஜோதி, மாக்களாக திரிந்த மனித சமுதாயத்தை புனிதர்களாக உருவாக்கி காட்டிய உத்தமர், உலக மக்களுக்கு அருளாக உதித்த உண்மை தூதுவர் காத்த முன் நபி முஹம்மது (ஸல்) அவர்களை நோக்கி "நபியே! அறிந்தவர்களும் அறியாதவர்களும் சமமாவார்களா? என (மக்களிடம்) கேட்பீராக" என்று ஒரு பொருள் நிறைந்த தத்துவ வினவை எழுப்புகின்றான்.

கோடான கோடி மக்கள் வாழும் இந்த குவலயத்தில் அறிஞர்கள், அறிவில்லாதவர்கள் என்று இரு தரப்பினர்கள் உலவி வருகின்றனர். மனிதர்கள் என்ற ரீதியில் ஓர் இனமாக இருந்தாலும் அறிவு, ஞானம் என்ற ரீதியில் இந்த மனித சமுதாயம் இரு பிரிவினர்களாக பிரிந்து திகழ்கின்றனர் என்பதை இத்திருவசனம் தெள்ளத் தெளிவாக எடுத்தியம்புகிறது. உலகில் உள்ள மற்ற படைப்பினங்களைவிட மனித சமுதாயம் சிறந்துவிளங்கினாலும், அறிவுஎன்ற ரீதியில் அறிவில்லாத மனிதர்கள் அறிவுள்ள ஞானமுள்ளவர்களான உலமாப்பெருமக்களை விட்டும் தனித்துபிரிந்து விடுகின்றனர். மனிதனுக்கு மற்ற சிறப்புகளைவிட அறிவென்ற சிறப்புதான் உயர்வைத்தரும், அறிவில்லாதவர்களுக்கு அகிலத்தில் உயர்வில்லை.



ஒரு ஞானி கூறுவதைப் போல அறிந்த ஆலிம்கள் பார்வை உடையவர்களாகவும், அறியாத ஜாஹில்கள் குருடர்களாகவும் உள்ளார்கள் என்ற வாக்கியம் எவ்வளவு பொருத்தமாகத் தெரிகிறது. ஆகவே வல்ல இறைவன் தனது திருவசனத்தில் இரண்டு சாரார்களை சுட்டி காட்டி இரண்டு சாரார்களும் எப்படி சமமாவார்கள். முடியாது, முடியவே முடியாது என்பதை சொல்லி இரண்டு பிரிவினர்களை சுட்டிக் காட்டுகின்றான். உலமாபெருமக்கள் விஷயங்களை தெள்ளத் தெளிவாக அறிந்து செயல்படுகின்றனர். அறியாதவர்கள் அறியாமை என்னும் இருள் சூழ்ந்தவர்களாக செயல்படுகின்றனர். இந்த இரண்டு சாரார்களில் இறைவனுக்கு பொருத்தமான அடியார்கள் அறிந்து தெளிந்த உலமா பெருமக்கள்தாம் என்பது தெள்ளத் தெளிவாக விளங்குகிறது.

இனி அறியாமல் செயல்படுவதினால் ஏற்படும் ஆபத்துகளை சில உண்மை சம்பவங்களின் மூலம் நாம் ஆராயலாம்: ஓர் ஊரில் இரு சகோதரர்கள் வாழ்ந்து வந்தனர். அண்ணன் இல்மை தேடி அதை படித்துணர புறப்பட்டு விட்டார். தம்பியோ, இல்மைத் தேடாமல் பக்கத்தில் உள்ள ஒரு மலையின் பொதும்பிலே சென்று இறைவனை இபாதத்து செய்ய முற்பட்டுவிட்டார். இருவர்களும் தம் தம் செயல்களில் மும்மரமாக ஈடுபட்டு கொண்டிருக்கின்றனர். ஒருநாள்...ஷைத்தான் மலைப் பொதும்பில் இறைவனை வணங்கி கொண்டிருக்கும் தம்பியிடம் சென்றான். அவரின் அயராத இபாதத்தைக் கண்டு கோபமடைந்த ஷைத்தான் ஒரு சூழ்ச்சியை செய்து அவரின் இபாதத்தைக் கெடுக்க நாடியவனாக,

"ஓ...ஆபிதே! என்ன இபாதத்து செய்துகொண்டிருக்கிறீர்! நான் சொல்லும் முறைப்படி நீர் இபாதத்து செய்வீரேயானால் உம் வணக்க வழிபாடுகள் இறைவனால் ஏற்றுக்கொள்ளப்படும்" என்று மயக்கினான். இதைக் கேட்ட ஆபித் 'நான் இவ்வளவு காலமாக செய்த இபாதத்து வீணாகிவிட்டதே.. சரி நீர் சொல்லித் தாரும் அதன்படி செயல்படுகிறேன்' என்றுகூறினார். உடனே... ஷைத்தான் ஆபிதேஅங்கு

ஓடும் ஒரு "எலி"யைப் பிடித்து மௌத்தாக்கி உம் கழுத்தில் மாலையாக அணிந்து கொண்டு உம் இபாதத்தை தொடரும், அது இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படும் என்று கூறினான். இதைக் கேட்ட ஆபித் அதன்படி செயல்படத் துவங்கினார். ஷைத்தான் தன் மாய வலையை அப்பாவி ஆபிதிடம் விரித்து விட்டு மறைந்து விட்டான். "எலி" மாலையை கழுத்தில் அணிந்து கொண்டு தம் இபாத்தை செய்து கொண்டிருக்கிறார்.

காலங்கள் பல ஓடி மறைந்தன...அண்ணன் பல கலைகளை கற்று தேர்ச்சி பெற்று சிறந்த ஆலிமாக, அறிஞராக தம் ஊருக்கு திரும்புகிறார். தம் தம்பியை விசாரிக்கிறார். தம்பியின் நிலையை (அவர் மலைப் பொதும்பில் இபாதத்தில் ஈடுபட்டு உள்ளார்) என்பதை வீட்டார்கள் எடுத்து கூறினார்கள். உடனே ஆலிமானவர் தம் தம்பியான ஆபிதைப் பார்த்து வர புறப்பட்டார். தம்பியின் நஜீஸான நிலையைக் கண்ட அண்ணன் கண் கலங்கினார். தம்பியை அழைத்து நடந்ததை விசாரித்தார். நடந்ததை விவரித்தார் தம்பி. "என்ன? காரியம் செய்தாய் நீ-உன்னை ஷைத்தான் வழி கெடுத்து விட்டான். நீ வணங்கிய அத்தனை இபாதத்துகளும் வீணாகி உன் வாழ்க்கையே நாசமாக போய்விட்டதே. மார்க்க இல்மு இல்லாததின் காரணமாக உன்னை ஷைத்தான் ஏமாற்றி படு பாதாளத்தில் தள்ளி விட்டான்" என்று வருந்தியவராக அண்ணன் சொன்னார். தம்பி அழுதவராக வாயடைத்து தம் தவறை உணர்ந்து திகைத்து நின்றார்.

பார்த்தீர்களா! மார்க்க இல்மு இல்லாததின் காரணமாக தம்பி ஷைத்தானால் வழிகெடுக்கப்பட்டார். அண்ணன் மார்க்க இல்மை கற்று ஓர் ஆலிமாக இருந்தமையால் தாமும் விளங்கி மற்றவரையும் திருத்தி மகிழ்ந்தார். நீங்களே சொல்லுங்கள்! அறிந்தவர்களும் அறியாதவர்களும் சமமாவார்களா? என்ன புரிகின்றதா உங்களுக்கு? இறைவனின் கூற்றுக்கு இச்சம்பவம் எவ்வளவு பொருத்தமாக அமைந்திருக்கின்றது என்பதை சிந்தித்துப் பாருங்கள். இது மட்டுமல்ல, இது போன்று எத்தனையோ சம்பவங்கள் வரலாற்று



ஏடுகளில் குவிந்து கிடக்கின்றன. அவற்றை உரிய இடத்தில் சொல்கின்றேன்.

இதன் அடிப்படையில்தான் அறிந்து தெளிந்த உலமாக்களைப் பற்றி அருமை பெருமானார் (ஸல்) அவர்கள் புகழும் பொழுது...ஆபிதை விட ஆலிமின் சிறப்பாகிறது உங்களில் தாழ்ந்தோர்களைவிட நான் எப்படி சிறப்பானவனாக இருக்கின்றேனோ அது போலவாகும் என்று கூறினார்கள். மேலும் சொன்னார்கள்: ஆபிதை விட ஆலிமின் சிறப்பாகிறது, (வானத்தில் மின்னும்) எல்லா நட்சத்திரங்களை விட சந்திரனின் சிறப்பைப் போன்றதாகும் என்று. ஆகவே அறிந்தவர்களான உலமா பெருமக்களின் சிறப்பு அளவிட முடியாத அளவுக்கு குவிந்து கிடக்கின்றன. எப்படி அறிந்தவர்களும் அறியாதவர்களும் சமமாக முடியும்? ஆகவே அறிந்தவர்களும், அறியாதவர்களும் சமமாவார்களா?

✦

# 7. உலமாக்களின் அந்தஸ்து

"உங்களில் விசுவாசம் கொண்டவர்களுக்கும், மார்க்க ஞானம் கொடுக்கப்பட்டவருக்கும் இறைவன் பல (தரஜா) அந்தஸ்துகளை உயர்த்துகின்றான்." (அல்குர்ஆன்)

இவ்வசனத்தில் வல்ல இறைவன் இரு பிரிவினர்களுக்கு அந்தஸ்துகளை உயர்த்துவதாகக் கூறுகின்றான். 1) முஃமீன்கள், 2) உலமாக்கள். ஈமான் கொள்ளாத காபிர்களை விட ஈமான் கொண்டு அதன்படி அமல் செய்கின்ற முஃமீன்களுக்கு பல அந்தஸ்துகளை அல்லாஹ் உயர்த்துகிறான்.

காபிர்களுக்கு இவ்வுலகத்திலும் இழிவு, மறு உலகத்திலும் இழிவு. இரு உலகிலும் அவர்களுக்கு இறைவனின்

கோபம் ஏற்படும். இரு உலகிலும் அவர்கள் வழி கேடர்கள் இவர்களைவிட ஈமான் கொண்ட முஃமின்களுக்கு இரு உலகிலும் வெற்றி அளிக்கக்கூடிய பல அந்தஸ்துகளை உயர்த்துகின்றான்.

அடுத்து ஈமான் கொண்ட முஃமின்களை விட உலமா பெருமக்களுக்கு இறைவன் பல தரஜாக்களை இரு உலகிலும் உயர்த்துகிறான். அதை அளவிட முடியாது. வல்ல இறைவன் தன் அருள் மறையில் பல தரஜாக்களை உயர்த்துகிறான் என்று கூறி இருப்பதிலிருந்து உலமாக்களுக்கு அளிக்கப்படும் உயர் அந்தஸ்துகள் எண்ணி முடிக்க இயலாதவை. இதைப் பற்றி அருமை பெருமானார் ரசூல் (ஸல்) அவர்கள் கூறும் போது...உலமாக்களுக்கு முஃமின்களின் அந்தஸ்தை விட 700 மடங்கு அந்தஸ்து அதிகமானது. ஓர் ஆலிமுக்கும் சாதாரண முஃமினுக்கும் உள்ள அந்தஸ்த்தின் தொலை தூரம் 500 வருடத்தின் தூரமாக இருக்கும் என்றும், உலமாக்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அந்தஸ்தில் தாழ்ந்ததாகிறது, இந்த துன்யாவை விட சிறந்தது என்றும், ஒவ்வொரு நாளும் இறைவன் உலகில் 1000 ரஹ்மத்துகளை இறக்குகின்றான். அதில் 999 ரஹ்மத்துகளை, உலமா பெருமக்கள் மீதும், பாக்கி ஒன்றை மற்ற முஃமின்களின் மீதும் இறக்குகின்றான் என்றும் அருமை பெருமானார் (ஸல்) அவர்கள் உலமா பெருமக்களின் உயர் அந்தஸ்துகளை எடுத்து கூறியுள்ளார்கள். இதிலிருந்து உலமாக்களுக்கு இரு உலகிலும் பல அந்தஸ்த்துகள் உள்ளன என்று நமக்கு தெளிவாகிறது. இந்த ஆயத்தில் பொதுப்படையாக முஃமின்களை அந்தஸ்தால் உயர்த்துகிறான், குறிப்பாக ஆலிம் உலமாக்களை உயர்த்தி முஃமின்களுக்கு இல்லாத பல அந்தஸ்துகள் இருப்பதை விளக்குகிறான் வல்ல இறைவன்.

ஒரு சமயம் அருமை பெருமானார் (ஸல்) அவர்களின் அவையிலே இரண்டு பேர்களைப் பற்றி பேச்சு ஏற்பட்டது. அவர்களில் ஒருவர் ஆலிமாக இருந்தார். இன்னொருவர் ஆபிதாக(வணக்கஸ்தராக) இருந்தார். இவ்விருவரில் சிறந்தவர் யார்? என்பது பற்றி பேச்சு நடந்தது. அப்பொழுது



அருமை பெருமானார் (ஸல்) அவர்கள் "உங்களில் மிகத் தாழ்ந்தவரைக் காட்டிலும் எனக்கு எவ்வளவு கண்ணியம் (அந்தஸ்த்து) இருக்கிறதோ, அவ்வளவு கண்ணியம் வணக்கசாலியைக் காட்டிலும் ஆலிம் (அறிஞர்)க்கு இருக்கிறது" என்று கூறினார்கள். இன்னும் "வானிலுள்ள மலக்குகளும், பூமியில் வாழ்கின்ற அனைத்துப் படைப்பினங்களும், பொந்துகளில் இருக்கின்ற எறும்புகளும், கடலிலே இருக்கின்ற மீன்களும் மார்க்க கலையைப் போதிக்கின்ற ஆலிமுக்கு பிழை பொறுக்கத் தேடுகின்றன" என்றும் உலமாக்களின் உயரிய அந்தஸ்துகளை எடுத்து கூறினார்கள். இந்த நிகழ்ச்சியிலிருந்து உலமா பெருமக்களுக்கு பெரும், பெரும் கண்ணியமும், அந்தஸ்த்துகளும் இரு உலகிலும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதை எழுத்தால் வர்ணிக்க முடியாது. அவர்களின் அந்தஸ்துகளை அல்லாஹ்வும் அவனின் தூதரும்தான் அறிவார்கள்.

★

## 8. "உலமாக்களிடம் கேளுங்கள்"

"அவர்களில் ஒவ்வொரு பிரிவினரிலும் மார்க்கவியலில் (உள்ள கலை, கலாச்சாரங்களை) விளக்கி கொள்ள ஆவன செய்யவில்லையென்றால்!... நீங்கள் அறியாத பாமரர்களாக இருந்தால்! அறிஞர் பெருமக்களிடம் (ஆலிம்கள்) கேளுங்கள்."

(அல்குர்ஆன்)

இந்த இறைவசனத்திலிருந்து பொதுமக்களுக்கு எந்த விஷயங்கள் தெரியவில்லையோ அத்தனை விஷயங்களையும், உலமாக்களிடம் கேட்டு தெரிந்து கொள்ளவேண்டும் என்பது புலனாகிறது. எவருக்கு இறைவன் நலவை நாடுகின்றானோ அவருக்கு மார்க்க விஷயத்தில் விளக்கத்தைக் கொடுக்கிறான் என்று அருமை பெருமானார் (ஸல்) அவர்கள் உலமாக்களை புகழ்ந்து கூறினார்கள். ஆக நபி (ஸல்) அவர்களின் கூற்றுப் படி மார்க்கத்தில் விளக்கத்தைக் கொடுக்கப்பட்டவர்கள்

உலமாக்கள்தாம் என்று தெளிவாகிறது. ஆகவே மார்க்கத்தில் சரியான விளக்கத்தைக் கொடுக்கப்பட்ட உலமாப்பெருமக்களிடம் பொதுமக்கள் எல்லா பிரச்சனைகளையும் தீர்த்து கொள்ள வேண்டும். ஏனெனில் சமுதாயத்தில் மார்க்க இல்மை கொடுக்கப்பட்டவர்கள் உலமாப்பெருமக்கள்தாம். கல்வி நபிமார்களிடம் இருந்து வந்த வாரிசு சொத்தாகும். இனிப்பு உள்ள இடத்தில் ஈக்கள் மொய்ப்பது போல கல்வி ஞானமுள்ள உலமாப்பெருமக்களிடம் பொதுமக்கள் மார்க்க விஷயங்களை கட்டாயம் கேட்டே ஆகவேண்டும்.

ஓர் ஆலிம் இடம் ஒரு சாதாரண மனிதர் வந்து, ‘‘குர்ஆனில் எல்லாம் இருக்கிறது. அனைத்துக்கும் தீர்வு குர்ஆனில் உள்ளது என்று கூறுகின்றீர்களே. ஒரு கிலோ மைதாமாவில் எத்தனை ரொட்டிகள் போடலாம் என்று குர்ஆனில் உள்ளதா? என் இந்த கேள்விக்கு குர்ஆனிலிருந்து தகுந்த ஆதாரம் காட்டுங்கள்’’ என்றார். உடனே ஆலிம் அவர்கள் பக்கத்தில் இருந்த ஒரு சிறுபையனைப் பார்த்து ‘‘ரொட்டி மாஸ்டரை நான் அழைத்தேன் எனறு அழைத்து வாரும்!’’ என்று சொன்னார்கள். பையன் ரொட்டி மாஸ்டரை அழைத்து வந்தான்.

ஆலிம்:- ஒரு கிலோ மைதாமாவில் எத்தனை ரொட்டிப் போடலாம். மாஸ்டர்:- இருபத்தைந்து ரெட்டிகள் போடலாமுங்க. உடனே ஆலிம் வந்தவரிடம் இருபத்தைந்து ரொட்டிகள் போடலாம் என்று சொன்னார்கள். வந்தவருக்கு கோபம் வந்துவிட்டது ‘‘இப்படி விசாரித்துதான் எல்லோரும் அறிந்து கொள்ளலாமே! நான் கேட்டது குர்ஆனில் உள்ளதா என்று தானே’’ என்றார். உடனே ஆலிம் அவர்கள் மேற்கூறப்பட்ட இறைவசனமான ‘‘நீங்கள் அறியாதவர்களாக இருந்தால் அறிஞர் பெருமக்களிடம் (ஆலிம்கள்) கேளுங்கள்!’’ என்ற வசனத்தைக் கூறி இறைவனே இப்படிக் கூறி இருக்கின்றான் என்று எடுத்து கூறி குர்ஆனில் எல்லாம் உள்ளது. இதில் சந்தேகத்திற்கு இடமே இல்லை என்பதை சரியான ஆதாரத்துடன் நிரூபித்து காட்டினார். வந்தவர் வாயடைத்து நின்றார்.



இது மட்டுமா? இஸ்லாமிய வரலாற்று ஏடுகளில் எத்தனையோ சம்பவங்கள் பொதிந்து கிடக்கின்றன. அவைகளில் சிலதை இங்கு நான் எழுதுகிறேன். படித்து மகிழுங்கள்.

ஹல்ரத் உமர் (ரலி) அவர்களின் ஆட்சி காலம் அது. ஒரு நஸ்ரானி சில கேள்விகளை எழுதி தயவு செய்து இவைகளுக்கு வேதங்களின் மூலம் பதில் சொல்லுங்கள் என்று உமர் (ரலி) அவர்களிடம் கேட்டனுப்பினான். கேள்வி: (1) ஒரு தாயின் வயிற்றில் இரு குழந்தைகள் ஒரே நாளில் பிறந்தன, பின்பு ஒரே நாளில் இருவரும் மரணம் அடைந்தார்கள். ஆனால், அவ்விருவரில் ஒருவரின் வயது நூறு வருடங்கள் அதிகமாகவும், ஒருவரின் வயது நூறு வருடங்கள் குறைவாகவும் இருந்தது. இவ்விரு சகோதரர்களும் யார்? இது சாத்தியம் ஆகுமா? கேள்வி: (2) ஓர் இடம் இருக்கிறது. அதில் ஒரு தடவைதான் சூரியன் உதயமானது அதற்கு முன் உதயமானதுமில்லை. இனி ஒருபோதும் உதயமாகவும் செய்யாது, அது எந்த பூமி? கேள்வி: (3) ஒரு புதை குழி, அது உயிராக இருக்கிறது. அதில் இருக்கும் பிரேதமும் உயிருடன் இருக்கிறது. அந்த புதை குழி பிரேதத்தை சுமந்து கொண்டு சுற்றித் திரிகிறது. பின்பு அந்த பிரேதம் புதை குழியை விட்டு வெளியில் வந்து சில காலம் வாழ்ந்து, பின்பு மரணம் அடைகிறது. அது எந்த புதை குழி? கேள்வி: (4) ஒரு கைதி அவனுக்கு ஜெயிலுக்குள் மூச்சுவிட அனுமதி இல்லை. ஆனால் அந்த கைதி மூச்சு விடாமலேயே ஜெயிலுக்குள் உயிருடன் இருக்கின்றான். அது எந்த கைதி?

ஹல்ரத் உமர் (ரலி) அவர்கள், ஹல்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களை அழைத்து, இக்கேள்விகளுக்கு விடை எழுதுமாறு கூறினார்கள். உடனே இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அதே இடத்தில் உட்கார்ந்து பதில் எழுதினார்கள்: பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர் ரஹீம். நீங்கள் கேட்ட முதல் கேள்வியில் குறிப்பிட்ட இரு சகோதரர்களும் ஹல்ரத் உஜைர் (அலை) அவர்களும், அவர்களின் சகோதரருமாவார்கள். இவ்விருவரும், ஒரே நாளில்தான் ஜோடியாகப் பிறந்தார்கள். அவ்விருவரின் மரணமும் ஒரே நாளில்தான் ஏற்

பட்டது. ஆனால், இறைவன் தனது வல்லமைகளை வெளிப்படுத்துவதற்காக ஹஸ்ரத் உஜைர் (அலை) அவர்களை நூறு வருடங்கள் வரை மரணமாக்கி வைத்திருந்தான். மறுபடியும் இறைவன் அவர்களை உயிர்ப்பித்தான். அதன்பின், அவர்களின் சகோதரரும் ஒரே நாளில் மரணமடைந்தார்கள். அதனால் ஹஸ்ரத் உஜைர் (அலை) அவர்களின் வயது நூறு வருடம் குறைவாகவும், அவர்களின் சகோதரரின் வயது நூறு வருடம் அதிகமாகவும் ஆயிற்று. இது விபரம் குர்ஆன் ஷரீபில் கூறப்பட்டிருக்கிறது. உங்களின் இரண்டாவது கேள்வியிலுள்ள பூமி, கடலுக்கு அடியிலிருக்கும் ''குல்ஜம்'' என்ற தீவு. அந்த இடத்தில்தான் பிர்அவ்ன் மூழ்கடிக்கப்பட்டான். அத்தீவில் ஒரே ஒரு தடவைதான் சூரியன் உதயமானது. இனி ஒருபோதும் சூரியன் உதிக்காது.

உங்களின் மூன்றாவது கேள்வி, புதை குழியும் உயிராக இருக்கிறது. அதிலுள்ள பிரேதமும் உயிராக இருக்கிறது. அப்புதைகுழி அப்பிரேதத்தை சுமந்து கொண்டு சுற்றித் திரிகிறது. அது ஹஸ்ரத் யூனூஸ் (அலை) அவர்களை விழுங்கிய மீனாகும். அல்லாஹ்வின் ஆணைப்படி அந்த மீன் யூனூஸ் (அலை) அவர்களை விழுங்கியது. அதன் வயிற்றில் யூனூஸ் (அலை) அவர்கள் நாற்பது நாள் தங்கியிருந்தார்கள். அவர்களை அம்மீன் சுமந்து கொண்டு கடலில் சுற்றித் திரிந்தது. அவர்களும் உயிருடனிருந்தார்கள். அம்மீனும் உயிருடன் இருந்தது. பின்பு அவர்கள் மீன் வயிற்றிலிருந்து வெளி வந்து சில காலம் வாழ்ந்து பின்பு மரணமடைந்தார்கள். நான்காவது கேள்வி: எந்த கைதிக்கு ஜெயிலில் மூச்சுவிட அனுமதி இல்லையோ, அது தாயின் கருவறையில் இருக்கும் குழந்தையாகும். அது மூச்சு விடாமலேயே கர்ப்பத்தில் உயிருடன் இருக்கிறது'' என்று எழுதி முடித்தார்கள்.

இந்த பதில்களை உமர் (ரலி) அவர்கள் அந்த நஸராவுக்கு அனுப்பி வைத்தார்கள். அந்த பதில்களை பார்த்த அவன் திகைப்படைந்து இப்போதும் கூட முஸ்லிம்களில் யாராவது ஒரு நபி இருப்பார்கள் போல் தெரிகிறது. ஏனென்றால், இக்கேள்விகளுக்கு நபிமார்களைத் தவிர வேறு யாரும் பதில் கூற முடியாது என்று கூறினான்.



அடுத்து வரும் சுவையான நிகழ்ச்சிகளைப் பாருங்களேன்: ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் ஆட்சிகாலம். ஒரு மனிதனுக்கு இரண்டு மனைவிகள், ஒரே நேரத்தில் இருவரையும் திருமணம் செய்துகொண்டான். அவர்கள் இருவரும் ஒரே நேரத்தில் குழந்தையை பெற்றெடுத்தார்கள். அதுவும் நள்ளிரவு நேரம், விளக்கு வசதிகள் இல்லாத காலம். இரண்டு அறை கொண்ட அந்த வீட்டில் அவ்விரு மனைவிகளும் தனித் தனி அறையில்தான் பிரசவித்தார்கள். அவ்விரு அறைகளுக்கும் சேர்த்து ஒரே ஒரு விளக்கு மாத்திரமே இருந்தது. அந்த ஒரு விளக்கும் பிரசவிக்கும் நேரம் பார்த்து அணைந்து விட்டது.

பிறந்த இரண்டு குழந்தைகளையும் வெளியில் கொண்டு வந்து சுத்தம் செய்வதிலேயே முழு கவனம் செலுத்திக் கொண்டிருந்த ஆயாவினால் யாருக்கு என்ன குழந்தைப் பிறந்தது? இரண்டும் ஆண்களா, அல்லது இரண்டும் பெண்களா? அல்லது ஒன்று பெண்ணா மற்றொன்று ஆணா என்று கூட அவளால் கவனிக்க முடியவில்லை. ஆனால் குழந்தைகளை சுத்தம் செய்த பின்புதான் ஒன்று ஆண், மற்றொன்று பெண் என்று தெரியவந்தது. ஆளுக்கொரு குழந்தையை கொடுத்து விட்டு நழுவிவிட்டாள் அந்த ஆயா. ஆனால் அவ்விரு பெண்களும் ஆண் குழந்தை தனக்குரியது, தனக்குரியது என்று சொந்தம் கொண்டாடினார்கள்.

கணவன் எவ்வளவு சொல்லியும், அவர்கள் பணிவதாக தெரியவில்லை. கிராமப் பஞ்சாயத்திற்குப் பிரச்சனை சென்றது. அங்கும் தெளிவு ஏற்படவில்லை. நீதி மன்றம், உச்சநீதி மன்றம் எல்லாம் சென்றும் சரியான தீர்ப்பு கிடைக்கவில்லை. கலீபா அலீ (ரலி) அவர்களின் அரண்மனைக்கே இவ்வழக்கு நீதி கோரிவந்துவிட்டது. கணவனையும், அவ்விரு மனைவிகளையும் தீரவிசாரித்த பின்னர் அந்த இருபெண்களிடமும் எடையாலும் அளவாலும் சரிசமமாக உள்ள கிண்ணங்களைக் கொடுத்து மறைவிடம் சென்று இந்தக் கிண்ணத்தில் தங்கள் தங்களின் தாய்ப்பாலை கறந்துகொண்டு வரும்படி கலீபா அலீ (ரலி) கட்டளையிட்டார்கள். அவ்விருவரும் தாய்ப்பாலை கிண்

ணங்களில்கறந்து கொடுத்தார்கள். இரண்டுகிண்ணங்களையும் ஒருதராசைக் கொண்டுவரச்செய்துஎடைபோடசெய்தார்கள். எடையாலும், அளவாலும் சரிசமமான கிண்ணங்கள் அவை. அந்த இரு கிண்ணங்களிலும் குறிப்பிட்ட குறி வரை பால் இருக்கின்றன. அதை எடைப் போடும்போது ஒன்று எடை அதிகமாகவும், மற்றென்று எடை குறைவாகவும் இருந்தன.

எடைகூடிய கிண்ணத்தை எடுத்து இது யாருடையது என்று கலீபா கேட்டபோது 'அது என்னுடையது' என்று ஒருத்தி முன் வந்தாள். மற்றவளிடம் 'இது அவளுடையது தானே!' என்று கேட்க மற்றவளும் "ஆமாம்! அது என் சக்களத்தியுடையதுதான்" என்று ஒப்புக்கொண்டு உறுதி செய்தாள். "அப்படியென்றால் எடை கூடிய இந்தப் பால் கிண்ணத்திற்குச் சொந்தக்காரியான இவளுக்குத்தான் ஆண் குழந்தை சொந்தமானது. ஏனெனில் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தது அவள்தான்." என்று ஹஸ்ரத் அலீ (ரலி) தீர்ப்பு செய்தார்கள். இத்தீர்ப்பை பற்றி மக்கள் குழம்பி இருக்கும் இந்நேரத்தில் உடனே அலீ (ரலி) அவர்கள் விளக்கம் கொடுத்தார்கள். அந்த அற்புத விளக்கத்தை நாமும் பார்ப்போம்:

"நமது சுத்த சத்திய புனித குர்ஆனில் பாகப் பிரிவினை சம்பந்தமாக குறிப்பிடும்போது "மித்லு ஹஸ்ஸில் உன் தயைனி" (ஆண்களுக்கு இரண்டு பாகங்கள், பெண்களுக்கு ஒரே ஒரு பாகம்தான்) என்று குறிப்பிடப்பட்டுள்ளதை நீங்களெல்லாம் அறிந்து வைத்துள்ளீர்கள் அல்லவா? சொத்தில் மாத்திரம்தான் ஆண்களுக்கு இரண்டு பங்கு என்று பொருளல்ல. அறிவு விஷயத்திலும் கூட ஆணுக்கு இரண்டு பங்கு அறிவும் பெண்ணுக்கு ஒரு பங்கு அறிவும் வழங்கப்பட்டுள்ளது. அதுபோல அனைத்திலுமே ஆணுக்கு இரண்டு பங்கும், பெண்ணுக்கு ஒரு பங்கும் என்பதுதான் இயற்கையின் நியதியாக இருந்து கொண்டிருக்கிறது. இந்த இயற்கையின் நியதிக்கு ஒப்ப பெண் குழந்தைப் பிறப்பதால் தாயின் மார்பகத்தில் ஊற்றெடுக்கும் பாலைப் பார்க்கிலும் ஆண் குழந்தை பிறப்பதால் ஊற்றெடுக்



கும் தாய்பால் எடை கூடியதாகத்தான் இருக்கமுடியும். இந்த இயற்கையின் உண்மையைத்தான் நீங்களெல்லொரும் கண்டு களித்தீர்களே! ஆகவேதான் எடை கூடிய பாலை உடைய பெண்ணுக்கு ஆண் குழந்தை சொந்தம் என்று தீர்ப்பு கூறினேன்" என்று காரணத்தை கூறினார்கள், கலீபா அலீ (ரலி) அவர்கள். மக்கள் ஆச்சரியத்தில் மூழ்கி விட்டார்கள்.

ஒரு மனிதன் தனது மனைவியைப் பார்த்து 'நீ சந்திரனைவிட அதிக அழகுள்ளவளாக இல்லாவிட்டால் தலாக் ஆகிவிடுவாய்' என்று கூறினான். அதன்பின் இவ்விஷயம் அறிஞர் ஷாபிஈ (ரஹ்) அவர்களிடம் வந்தது. அவர்கள் தலாக் ஏற்படவில்லை என்று கூறி விட்டார்கள். ஏனெனில் பெண் மனித இனம். மனிதனைப் பற்றி கூறுகையில் இறைவன் எல்லா வஸ்துகளைவிட மனித இனத்தை நாம் அழகிய வடிவத்தில் படைத்துள்ளோம் என்று கூறியுள்ளான். சந்திரன் மனிதனைக் காண மேலானதாக இருந்தால் மனிதனை நாம் அழகிய வடிவத்தில் படைத்துள்ளோம் என்று இறைவன் கூறி இருக்கமாட்டான் என்று விளக்கம் கூறினார்கள்.

ஒரு தடவை மக்கள் பலர் ஒன்று கூடி இமாம் அபூ ஹனீபா (ரஹ்) அவர்களிடம் இமாமைப் பின்பற்றித் தொழக் கூடியவர்கள் அல்ஹம்து சூரா ஓதுவது சம்பந்தமாக விளக்கம் சென்று கேட்டார்கள். அப்பொழுது இமாமவர்கள் "நீங்கள் எல்லோரும் சேர்ந்து என்னிடம் பேசுவதற்கு ஒருவரை ஏற்படுத்திக்கொள்ளுங்கள். எல்லோரிடமும் பேசுவதற்கு சிரமமாக இருக்கிறது" என்று கூறினார்கள். அவர்கள் அதை ஏற்று எல்லோரின் சார்பிலும் பேசுவதற்கு ஒருவரை நியமித்தார்கள். அப்பொழுது இமாமவர்கள் 'இதுதான் உங்களுக்கு பதில்' என்று கூறினார்கள். எவ்விதம் நீங்கள் உங்கள் சார்பில் வக்கீல் ஒருவரை ஆக்கினீர்களோ, அவ்விதமே பின்பற்றித் தொழக்கூடியவர்கள் இமாமை தங்களது வக்கீலாக ஆக்கிகொள்கிறார்கள் என்றார்கள்.

இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள், மதீனாவில் முப்தியாக (மார்க்கத் தீர்ப்பளிப்பவராக) இருந்த நேரத்தில், ஒரு

பெண் திடீரென மரணமடைந்தாள். அவளை அடக்கம் செய்வதற்கு குளிப்பாட்டியபோது, குளிப்பாட்டிய பெண்ணின் கை, அப்பிணத்தின் மர்மஸ்தானத்தில் மாட்டிக் கொண்டது, எவ்வளவோ முயன்றும் கையை வெளியே எடுக்க முடியவில்லை. அப்பொழுது மக்கள் இமாம் மாலிக் (ரஹ்) அவர்களிடம் சென்று முறையிட்டார்கள். அது சமயம் இமாம் அவர்கள் "குளிப்பாட்டும் இப்பெண், மரணித்தப் பெண்ணைப் பற்றி அவதூறான எண்ணம் கொண்டிருக்க கூடும், மரணித்த பெண்ணோ பரிசுத்தமானவளாகத் தெரிகிறது. எனவே அவள் கொண்ட அவதூறுக்குரிய தண்டனை நிறைவேற்றப்படாதவரை அவளின் கை, அப்படியேதான் இருக்கும்" என்று கூறினார்கள். அதுபோல் அவதூறின் தண்டனையாக சவுக்கால் 80 அடி அடிக்கப்பட்டது. அப்பொழுது அவளின் கை தானாகவே மர்மஸ்தானத்திலிருந்து விடுபட்டது.

ஒருவர் தம் மனைவியின் கையிலிருந்த தண்ணீர் நிரம்பிய குவளையை தம்மிடம் தரும்படி கேட்டார். அவளோ மறுத்தாள். அதனால் கோபம் கொண்ட கணவன் அவளை நோக்கி, "அந்த நீரை நான் குடித்தாலும் அல்லது நீ குடித்தாலும் அல்லது அடுத்தவர்களுக்கு அதைக் கொடுத்தாலும் அல்லது அதைக் கீழே கொட்டினாலும் நீ தலாக்" என்று சொல்லிவிட்டான். அதிர்ச்சியுற்ற அப்பெண்மணி இமாம் அபூ ஹனீபா (ரஹ்) அவர்களிடம் சென்று தலாக்-விவாகரத்திலிருந்து விடுதலை பெற வழிகாட்டுமாறு பணிவுடன் வேண்டிக் கொண்டார். இமாம் அவர்கள் "ஒரு துணியை அந்த நீரில் முக்கி, அது நன்றாக நீரை உறிஞ்சிய பின் அதை அப்படியே வெயிலில் காயப் போட்டுவிடு" என்று வழி கூறினார்கள்.

ஹல்ரத் ஷைகு அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்கள் காலத்தில் ஒரு மனிதன், தன் மனைவியிடத்தில், 'எனக்கு உலகில் எவரும் சரி நிகர் இல்லாத அளவு நான் வணக்கம் புரியவில்லையானால், நீ தலாக்" என்று கூறினான். இது விஷயமாக ஹல்ரத் குத்புனாவிடம் விளக்கம் கேட்டார்கள். உடனே ஹல்ரத் அவர்கள் அம்மனிதனிடம், 'நீ கஃபத்துல்



லாஹ்விற்கு சென்று ஒருவரும் இல்லாத சமயத்தில் தவாபு செய். உன் மனைவி தலாக் ஆகமாட்டாள்' என்று தீர்ப்புக் கூறினார்கள்.

ஆக இதே போல் ஏராளமான சம்பவங்கள் வரலாற்று ஏடுகளில் நிறைந்து இருக்கின்றன. நூல் விரிவை அஞ்சி சுருக்குகிறேன். பார்த்தீர்களா? நமது உலமா பெருமக்களின் தத்துவ தீர்ப்புகளை! அதிசய பதில்களை! ஆகவே அறத்தின் காவலர்கள் ஆலிம்கள்! அறிவின் வீட்டிற்கு சொந்தக்காரர்கள் ஆலிம்கள்! அகிலத்தின் அருட்கொடை அண்ணலெம் பெருமானாருக்கு அனந்தக்காரர்கள் ஆலிம்கள்! அவர்களிடமே நீங்கள் சென்று உங்களின் உள்ளத்தின் சந்தேக எண்ணங்களை கேட்டுப் போக்கி புரிந்துக் கொண்டு வாழுங்கள். உண்மையின்பால் ஈமானை ஒப்படைத்து உயர்ந்த அந்தஸ்துகளை அடையுங்கள். நல்லதை பற்றி உலமாக்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். நல்லதை கேட்டு அறிந்துகொள்வது அறிவின் பகுதியாக இருக்கிறது என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

## 9. "அல்லாஹ்வை அஞ்சும் ஆலிம்கள்"

"அல்லாஹ்வின் அடியார்களில் அல்லாஹ்விற்கு அஞ்சி நடப்பவர்கள் ஆலிம்களேயாகும்"

(அல்குர்ஆன்: 4: 162)

ஆம்! பத்தரைமாற்று பசும் முத்துக்களான வான் மறை போற்றும்படி ரத்தின வசன வரிகளால் சித்தமே சிலிர்த்திடும் பாங்கில் இத்தரையில் இலங்கும் மொத்த ஆலிம்கள அனைவர்களுக்கும் முத்திரைப் பதித்து பக்தியின் மணி மகு

டத்தை மனோகரமாக்கி காட்டுகின்றான் அல்லாஹ், உண்மையில் அல்லாஹ்விற்கு அஞ்சி நடப்பவர்கள் உலமாபெருமக்கள்தான். காரணம் அவர்கள் மார்க்கத்தை நன்கு தெளிவாக அறிந்தவர்கள், அல்லாஹ்வின் வல்லமையைப் புரிந்தவர்கள், அவர்கள் அல்லாஹ்வின் அச்சத்தால் வடித்த கண்ணீர் இறைவனை அஞ்சி வாழ்ந்த நிலைமைகள் எழுதி காட்ட இயலாதவையாக இருக்கின்றன. நான் ஒரு மரமாக பிறந்திருக்கக் கூடாதோ! அப்படிப் பிறந்திருப்பேனாயின், நான் வெட்டப்பட்டு விறகாகப் பிறருக்கு பிரயோசனப்பட்டிருப்பேனே? நான் புல்லாக பிறந்திருக்கக் கூடாதா! மிருகங்களுக்கு இரையாகப் பயன்பட்டிருப்பேனே! ஒரு விசுவாசியுடைய உடலின் உரோமமாகவாவது நான் பிறந்திருக்கக் கூடாதா என ஏங்கி இறைவனை அஞ்சுவார்கள்.

ஹல்ரத் உமர் (ரலி) அவர்கள் பல சந்தர்ப்பங்களில் ஒரு சிறு துரும்பைக் கையிலெடுத்துக் கொண்டு நான் இச்சிறு துரும்பாக இருக்கக் கூடாதா? என்று இறைவனை அஞ்சி கொள்வார்கள். அல்லாஹ்வின் அச்சத்தின் காரணமாக அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் சதா நேரமும் அழுது கொண்டே இருப்பார்கள். கண்ணீர் வடித்து, வடித்து அவர்களின் இரு கன்னங்களிலும் இருகோடுகள் விழுந்துபோயிருந்தன. கப்ருடைய வாழ்வை நினைத்து இறைவனைப் பயந்து தங்களது தாடி ரோமங்கள் நனையுமளவு ஹல்ரத் உஸ்மான் (ரலி) அழுதுகொண்டே இருப்பார்கள். ஹல்ரத் கபுருவாசிகளை பார்த்து இறைவனை நினைத்து அதிகமான அழுகையாக அழுது புலம்புவார்கள். அப்துல்லாஹ் இப்னு ரவாஹா (ரலி) அவர்கள் அழுது கொண்டே இருந்தார்கள். அவர்களது அழுகையை கண்டு அவர்களது மனைவியரும் அழ ஆரம்பித்துவிட்டனர். காரணம், இறுதி நாளன்று நரகை கடந்தாக வேண்டும். அதிலிருந்து எனக்கு இரட்சிப்புக் கிடைக்குமோ? என்று நினைத்து அழுது கொண்டே இருந்தார்கள்.

அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள், 'நான் பறவையாக பிறந்திருக்கக் கூடாதா, சுற்றி திரிவேனே! மனிதராகப்



பிறந்து அல்லாஹ்விற்கு மாறு செய்கின்றேனே!' என்ற முறையில் அழுது கொண்டே இருப்பார்கள். அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள் இறையச்சத்தால் அழுது அழுது கண்கள் கெட்டு போய்விட்டன. ஹல்ரத் ஸுஃப்யானுஸ் ஸவ்ரிய்யு (ரஹ்) அவர்கள் இறைவனை நினைத்து அழுது அழுது அவர்களின் ஈரல் வெடித்து போயிருந்தன. சில பெரியார்கள் இறை அச்சத்தால் அழுது அழுது மூச்சுத் திணரவாரம்பித்தார்கள். தங்களது உரோமங்கள் குத்திட்டு நின்றன. அழுது அழுது கண்கள் ஒளி இழந்திருந்தன. ஹஸன் பஸரி (ரஹ்) அவர்கள், அல்லாஹ்வின் அச்சத்தால் வீடு முழுவதையும் தம் கண்ணீரால் அழுது நனைத்தார்கள். இவர்கள் அழுது அழுது வடித்த கண்ணீர் தாரைதாரையாக வழிந்தோடின. இப்படி எண்ணற்ற உலமாபெருமக்கள் அல்லாஹ்வின் அச்சத்தால் அழுது அழுது கண்ணீர் வடித்துள்ளார்கள். இறைவன் கூறுவதைப்போல உண்மையில் அல்லாஹ்வை அஞ்சக் கூடியவர்கள் உலமாபெருமக்கள் தாம் என்பதை இச்சம்பவங்கள் நிருபிக்கின்றன.

இதுமட்டுமா இறைவன் மார்க்கத்தில் எதை எதையெல்லாம் ஹராம் ஆக்கியுள்ளானோ, அவற்றையெல்லாம் விட்டு ஒதுங்கி அல்லாஹ்வை பயந்து வாழக் கூடியவர்கள் நமது உலமாபெருமக்கள்தாம் என்பதை யாராலும் மறுக்க முடியாது. உதாரணமாக வட்டி, விபச்சாரம், மது, மாது, சூது, கொள்ளை, மோசடி, லஞ்சம் போன்ற பாவகரமான செயல்களை விட்டும் அல்லாஹ்வை அஞ்சி வாழ்ந்து இத்தவறுகளில் ஈடுபட்டிருக்கும் சமுதாய பாமர மக்களை திருத்தி வரும் தியாகக் கூட்டங்கள்தாம் நமது சத்திய உலமாக்கள். உண்மையிலேயே இறைவனை அஞ்சி வாழக்கூடியவர்கள் நமது உலமாக்கள்தாம் என்பதில் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை.

வல்ல இறைவனின் உண்மை கூற்றை உலகத்தில் நிருபித்து சத்திய வழியில் சென்று வெற்றி வாழ்க்கை வாழும் நமது மதிப்பிற்குரிய சமுதாய காவலர்களான உன்னத உலமாக்களை மதித்து அவர்களை கண்ணியப்படுத்தி வாழ்வோமாக.

★

# 10. "உலமாக்கள் நபிமார்களின் வாரிசுகள்"

உலமாக்களை கண்ணியப்படுத்துங்கள். ஏனெனில் அவர்கள் நபிமார்களின் வாரிசுகளாக இருக்கின்றார்கள்.

(அல்ஹதீஸ்)

உலமாக்கள் நபிமார்களின் வாரிசுக்காரர்கள். ஏனெனில் நபிமார்கள் தினாரையும், திர்கத்தையும் வாரிசுகளாக ஆக்கி செல்லவில்லை. அவர்கள் வாரிசுகளாக ஆக்கி சென்றது இல்மைத்தான். யார் அந்த இல்மை எடுத்துக் கொண்டாரோ அவர் நிரந்தரமான (ஏராளமான) பங்கை எடுத்தவராகிறார் என்று அருமை பெருமானார் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளினார்கள். உண்மையில் உலமாக்கள் நபிமார்களின் வாரிசுகள்தாம் என்பதற்கு உங்களுக்கு ஒரு சம்பவத்தை கூறுகிறேன்:

மன்னர் மஹ்மூது கஸ்னவி (ரஹ்) அவர்கள் ஒரு சிறந்த இஸ்லாமிய அரசர்களில் ஒருவராவார்கள். இவர்களுக்கு மூன்று விதமான சந்தேகங்கள் எப்பொழுதும் இருந்து கொண்டே இருந்தன. அதன் காரணமாக அவர்களின் மனது புண்பட்டிருந்தன. அந்த மூன்று சந்தேகங்களில் ஒன்று, தாம் சபுக்தஜீனுக்கு உண்மையில் பிறந்தவர்தாமா அதாவது அவர் உண்மையில் என் தந்தைதானா? என்பது. அவர் அவ்வாறு எண்ணியதற்கு காரணம் அவரின் தந்தை சபுக்தஜீன் அழகற்றவராக இருந்ததும் இவர் அழகராக விளங்கியதுமாகும். அவரின் இரண்டாவது சந்தேகம் தாம் இறந்தபின் தமக்குச் சுவனம் கிடைக்குமா நரகம் கிடைக்குமா என்பதாகும். மன்னரின் மூன்றாவது சந்தேகம் உண்மையில் உலமாக்கள் நபிமார்களின் வாரிசுகள்தாமா? என்பதாகும்.

இந்த சந்தேகங்களுக்கு தெளிவு ஏற்படாது அவர் மனக் குழப்பம் அடைந்திருந்தபோது ஓரிரவு வழக்கம் போல் மாறு வேடம் பூண்டு நகரைச் சுற்றிப் பார்த்து மக்களின் குறை



அறிந்து வருவதற்காக தயாரானார்கள். அரசர் வருவதை மக்கள் அறியாவண்ணம் இருப்பதற்காக ஊழியர்கள் முன்னே சென்று தெரு விளக்குகளை ஒன்றின்பின் ஒன்றாக அணைத்துக் கொண்டே சென்றார்கள். அப்பொழுது ஒரு தெரு விளக்கின் கீழ் மார்க்க கல்வி பயிலும் மாணவர் ஒருவர் நின்று தம் கிதாபை படித்துக் கொண்டிருப்பதைக் கண்ட ஓர் ஊழியர் அவ்விளக்கை அணைக்க மனமில்லாது, அரசரிடம் ஓடி வந்து விஷயத்தைக் கூறினர். அது கேட்ட அரசர் அந்த விளக்கை மட்டும் அணைக்காது விட்டு விட்டு ஏனைய விளக்குகளை அணைத்துக்கொண்டு செல்லுமாறு ஆணை இட்டார். அவ்வாறே ஊழியர்களும் செய்தார்கள்.

அன்றிரவு மன்னர் அயர்ந்து உறங்குகிறார். அவரின் கனவில் அருமை பெருமானார் (ஸல்) அவர்கள் தோன்றி, "யா மஹ்மூது இப்னு சபுக்தஜீன்! அல்லாஹு யுக்ரிமு பிக ஃபில் ஜன்னத்தி, கமா அக்ரம்த பிவரஃதத்தீ" என்று திருவாய் மலர்ந்தருளினார்கள். அந்த ஒரு வாக்கியத்திலேயே மன்னரின் மூன்று ஐயங்களுக்கும் விடை கிடைத்து விட்டது. அதன் பொருள் :- "சபுக்தஜீனுடைய மகனாகிய மஹ்மூதே! நீர் எவ்வாறு என்னுடைய வாரிசைக் கண்ணியப்படுத்தினீரோ, அதே போன்று அல்லாஹ் உம்மை சுவனத்தில் கண்ணியப்படுத்துவானாக!" என்பதாகும். இந்த ஒரு வாக்கியத்தில் அவர் உண்மையில் சபுக்தஜீனுக்குப் பிறந்தவர் தாம் என்பதும், அவர் மறுமையில் சுவனம் புகுவார் என்பதும், ஆலிம்கள் அருமை நபி (ஸல்) அவர்களின் வாரிசுகள் தாம் என்பதும் தெளிவாக பொதிந்துள்ளதை காணலாம்.

ஆகவே ஆலிம்கள் உண்மையில் நபிமார்களின் வாரிசுகள்தாம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. நபிமார்கள் தாம் மனிதர்களில் உயர்ந்தவர்கள். அவர்களின் வாரிசு பொருள்களான இல்முகளுக்கு சொந்தக்காரர்கள் உலமா பெருமக்கள்தாம். இதன் அடிப்படையில்தான் அருமை பெருமானார் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: 'எவர் உலமாக்களைக் கண்ணியப்படுத்துகின்றாரோ அவர் என்னை கண்ணி

யப்படுத்தியவராவார், யார் என்னைக் கண்ணியப்படுத்து கிறாரோ, அவர் அல்லாஹ்வை கண்ணியப்படுத்தியவரா வார். யார் அல்லாஹ்வை கண்ணியப்படுத்துகிறாரோ, அவ ரின் இருப்பிடம் சுவனமாகும்' என்று. ஆகவே நபிமார் களின் வாரிசுகள் உலமாக்கள்தாம் என்பதை அறிந்து அவர் களுக்கு செலுத்த வேண்டிய கண்ணியத்தை செலுத்தி செயல்படுவோமாக.

★

## 11. "உலமாக்களை கண்ணியப் படுத்துங்கள்"

"எவர்கள் உலமாக்களை கண்ணியப்படுத்துகிறார்களோ, அவர்கள் உண்மையில் அல்லாஹ்வை கண்ணியப்படுத்திய வராவார்கள்."

-(அல்ஹதீஸ்)

"எவர் ஓர் ஆலிமை கண்ணியப்படுத்துகிறாரோ, அவர் உண்மையில் எழுபது நபிமார்களை கண்ணியப்படுத்தியவ ரைப் போலவார்" என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார் கள்.

(அல்ஹதீஸ்)

அன்பு நேயர்களே! இப்பொழுது ஓர் ஆலிமை கண்ணி யம் செய்த ஓர் அரசரின் வாழ்வில் நடந்த நிகழ்ச்சியை எழுதுகிறேன். படித்து பயன்பெறுங்கள் : குராசான் நாட் டின் சிறந்த அரசராக நீதி வழுவாத மாமன்னராக இஸ்மா யில் சாமானி (ரஹ்) அவர்கள் ஆட்சி செய்து வந்தார்கள்.

ஒருநாள் நபிமார்களின் புனித வாரிசான ஆலிம் ஒரு வர் அரசரிடம் வந்தார்கள். அரசர் இஸ்மாயில் சாமானி (ரஹ்) அவர்கள் அந்த ஆலிமை முகமலர்ச்சியுடன் வர



வேற்று அவரை கண்ணியப்படுத்தினர். நல்ல பல உபகா ரங்களையும் செய்தார். அதன் பிறகு ஆலிம் அவர்கள் அரச ரிடம் விடை பெற்று சென்ற பொழுது அரசர் ஏழு அடிகள் வரை அந்த ஆலிமுடன் சென்று அவரை வழி அனுப்பி வைத்தார். பின்பு அரசர் தம் அலுவல்களை முடித்துக் கொண்டு படுக்கைக்குச் சென்று விட்டார்.

அந்த இரவில் மன்னர் இஸ்மாயில் சாமானி (ரஹ்) அவர்களின் கனவில் உத்தம தூதர் நபி பெருமானார் (ஸல்) அவர்கள் திருத்தோற்றம் வழங்கி 'இஸ்மாயிலே! எனது வாரிசான ஆலிமுக்கு நீங்கள் மரியாதை செய்ததற்காக உங்களை இரு உலகிலும் கவுரவப்படுத்த வேண்டுமென்றும் நீங்கள் அந்த ஆலிமுடன் ஏழு அடிவரை சென்று அவரை வழியனுப்பியதற்காக உங்கள் சந்ததியில் ஏழுபேர்கள் ஒரு வர் பின் ஒருவராக அரசராக வேண்டுமென்றும் நான் இறைவனிடம் பிரார்த்தனை செய்துள்ளேன்', எனக் கூறி விட்டு மறைந்தார்கள். நபிபெருமானார் (ஸல்) அவர்களின் புனித துஆவை இறைவன் ஏற்று கொண்டு விட்டான். இஸ்மாயில் சாமானி (ரஹ்) அவர்கள் இரு உலகிலும் வெற்றி பெற்றார்கள் என்பது தெளிவாக அறிவிக்கப்பட் டுள்ளது. நபி பெருமானார் (ஸல்) அவர்களின் கூற்றுப்படி அரசரின் வாரிசுகளில் ஏழு பேர்கள், ஒருவர் பின் ஒருவராக அரசராக இருந்து நீதியுடன் ஆட்சி புரிந்து புனித இஸ்லாத் திற்கு கண்ணியத்தைத் தேடித் தந்தார்கள். பார்த்தீர்களா புனித ஆலிமை கண்ணியப்படுத்தியதற்காக கிடைத்த பரிசை. ஆகவே உலமாக்களை கண்ணியப்படுத்துங்கள், இரு உலகிலும் மேன்மையடையுங்கள்.

★

# 12. "உலமாக்களின் ஷபாஅத்"

மறுமையில் நபிமார்கள், அதற்கடுத்தபடி உலமாக்கள், அதன்பின் ஷுஹதாக்கள் ஆகிய மூவர்க்கத்தினரும் அவர்கள் நாடியவர்களுக்கு அல்லாஹ்விடம் 'ஷபாஅத்' செய்வார்கள் என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(அல்ஹதீஸ்)

மக்களெல்லாம் கூடியிருக்கும் அந்த மறுமை நாளில் ஒவ்வொரு மனிதர்களும் கவலையில் ஆழ்ந்து கிடக்கும் கியாம நாளில், சொர்க்கத்தின் தலைவாசலுக்கு அருகில் நான்கு வகையினர் எவ்வித கேள்வி கணக்கும் தண்டனையுமில்லாமல் கொண்டு வந்து நிறுத்தப்படுவார்கள். அந்த நால்வர் யார் யார் தெரியுமா? 1) கற்றபடி நடந்து பேணுதலாக வாழ்ந்த ஆலிம், 2) ஜிஹாத் மார்க்கப் போரிலே தம் உயிரை தியாகம் செய்து வீரமரணம் அடைந்த ஷஹீத், 3) ஹஜ்ஜை முறிக்கும் எவ்வித தீய காரியங்களையும் செய்யாமல் பரிபூரணமாக ஹஜ்ஜை நிறைவேற்றிய ஹாஜி, 4) ஹலாலான முறையில் பொருளை சம்பாதித்து அதனை எவ்வித பெருமை, அகம்பாவம், கர்வம் இன்றி அல்லாஹ்வின் பாதையிலே தாராளமாக செலவு செய்த கொடையாளி. இந்த நான்கு பேர்களும், முதலில் தாமே சுவர்க்கத்தில் புகவேண்டும் என போட்டி போட்டு கொண்டிருப்பார்கள்.

அந்நேரத்தில் வல்ல இறைவன் அவர்களுக்கு மத்தியில் தீர்ப்பளிப்பதற்காக வானவர்கோன் ஹல்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்களை அனுப்பி வைப்பான். இறைவனின் உத்திரவுப்படி ஹல்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் அந்த நால்வரிடமும் வந்து முதலில் ஷஹீதிடம், நீர் முதன் முதலில் சுவர்க்கத்தில் புக விரும்புகின்றீரே அப்படி என்ன நல்ல அமல் செய்தீர்? என்று கேட்பார்கள். அதற்கவர் நான் இறைவனின் பொருத்தத்தையும், திருப்தியையும் நாடி போர்க்களம் சென்று எதிரிகளுடன் போர்புரிந்து இறைவனுக்காக என் உயிரையே தியாகம் செய்தேன் என்று கூறுவார்.



அப்போது, ஹஜ்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் ஷஹீதுக்குரிய பலாபலன்களையும், சிறப்பையும் நீர் எவ்வாறு அறிந்தீர்? என்று கேட்பார்கள். அதற்கவர் அதை நான் ஆலிம்களிடம் கேட்டுத்தெரிந்துகொண்டேன் என்றுகூறுவார். அப்படியென்றால், ஆலிமாகிறவர் உமக்கு ஹஜரத்தாகி விட்டார். ஆதலால் உமது ஹஜரத் (ஆசிரியர்) அவர்களுக்கு முந்தி செல்வது ஒழுக்கமும் அல்ல, மரியாதையும் அல்ல. மரியாதையைப் பேணி ஒதுங்கி நில்லுங்கள் என்று ஹல்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் கூறுவார்கள். ஷஹீது ஒதுங்கி நிற்பார்.

பின்பு ஹல்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் ஹாஜியை நோக்கி நீர் முதலில் சுவர்க்கத்தில் புகுவதற்கு ஆசைக் கொள்கிறீரே! நீர் அப்படி என்ன நற்செயல்கள் புரிந்தீர்! எனக் கேட்பார்கள். அதற்கவர் நான் அல்லாஹ்வின் உத்திரவுப்படி பொருள் நஷ்டத்தையும், உடல் கஷ்டத்தையும் பொருட்படுத்தாமல் புனித கஃபத்துல்லாஹ்விற்கு சென்று ஹஜ்ஜை நிறைவேற்றினேன் என்று கூறுவார். அப்போது ஹல்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள், ஹஜ்ஜுச் செய்வது கடமை என்பதையும், அதற்குரிய நன்மைகளையும் எவ்வாறு அறிந்து கொண்டீர்? என்று கேட்பார்கள். அதற்கு அவர் நான் நபிமார்களின் வாரிசுகளாகிய ஆலிம்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டேன் என்று கூறுவார். அப்போது ஹல்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் அப்படியானால் ஆலிமாகிறவர் உமக்கு உஸ்தாதாகிவிட்டார். ஆதலால் உமது உஸ்தாதுக்கு முந்தி செல்வது ஒழுக்கமுமல்ல, மரியாதையுமல்ல, ஆகவே மரியாதையைப் பேணி ஒதுங்கி நில்லுங்கள் என்று கூறுவார்கள்.

பிறகு ஹல்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் கொடையாளியை நோக்கி நீர் முதலில் சுவர்க்கத்தில் புக நாடுகிறீரே! அப்படி என்ன நல்ல அமல்கள் செய்தீர்? என்று கேட்பார்கள். அதற்கவர் நான் ஆகுமான முறையில் பொருளை சம்பாதித்து அதை அல்லாஹ்வின் பாதையிலேயே ஹலாலாக செலவு செய்தேன் என்று கூறுவார். அதற்கு ஹல்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் அவ்வாறு செலவு செய்வதின் நன்மை

களை யாரிடம் அறிந்தீர்? எனக் கேட்பார்கள். அப்போது அவர் நான் உலமாக்களிடம் கேட்டு தெரிந்துக்கொண்டேன் என்பார். அப்பொழுது ஹல்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் அப்படியானல் ஆலிமாகிறவர் உமக்கு ஹஜரத்தாகிவிட்டார். உமது ஹஜரத்திற்கு முந்துவது மரியாதையான செயலல்ல. ஆதலால் மரியாதையைப் பேணி ஒதுங்கி நில்லும்! என்று கூறி விடுவார்கள்.

இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் இமைகொட்டாது பார்த்து கொண்டிருந்த ஆலிமாகிறவர் ''வல்ல இறைவா! நான் கொடையாளியின் தர்மத்தாலும், உபகாரத்தாலுமே உன்னுடைய தீனுடைய கல்வியைக் கற்று ஆலிமானேன். ஆகையால் கொடையாளி முதலில் சுவர்க்கத்தில் செல்ல அனுமதியளிப்பாயாக'' என்று ஷபாஅத் செய்வார்கள். அப்பொழுது ஹக்சுபஹானஹு வதஆலா சுவர்க்கத்தின் பொறுப்பாளரை நோக்கி ஏ! ரிள்வானே! ஆலிமாகிறவர் உண்மையே சொல்கிருர்! ஆதலால் சொர்க்கத்தின் வாயிலைத் திறந்து முதலில் கொடையாளியை அதில் நுழையச் செய்வாயாக! என்று கட்டளையிடுவான். அதன்படி முதலில் கொடையாளியும் மற்றவர்கள் அவர்களுக்கு பின்னுலும் சொர்க்கத்தில் புகுவார்கள். பின்பு தாம் நாடிய பேர்களை தமது சிபாரிசு மூலமாக சுவர்க்கத்திற்கு அழைத்து கொண்டு குதூகலமாக ஆலிமாகிறவர் செல்வார். பார்த்தீர்களா உலமாக்களின் சிறப்புகளை, உண்மையை எடுத்து சொல்லி போட்டி இட்டுக் கொண்டவர்களை சமாதானம் செய்து தமது ஷபாஅத்தை செய்து அவர்களின் மீது சரியான தீர்ப்பு வழங்கிய சாதனை ஆலிமுக்குத்தான் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

இது மட்டுமல்ல தாம் நாடிய பேர்களுக்கு ஷபாஅத் செய்யும் உரிமை உலமாக்களுக்கு அளிக்கப்படும். நரகத்திற்கு தகுதியானவர்களைகூட தம் ஷபாஅத்தால் உலமாக்கள் சுவர்க்கத்திற்கு அழைத்து செல்வார்கள். ''முஹம்மது (ஸல்) அவர்களின் உம்மத்தினர்பால் அவர்களின் தாய் தகப்பனுர்களைவிட 'உலமாக்கள்' அதிக அனுதாபம் உள்ளவர்களாக உள்ளனர்'' என யஹ்யா இப்னு முஆத் (ரஹ்)



அவர்கள் கூறியபோது ''அது எப்படி?'' என வினவப்பட்டது. அதற்கு ''அவர்களின் தாய் தகப்பனுர்கள் உலக நெருப்பி (கஷ்டத்தி)லிருந்துதான் காப்பாற்றுகின்றனர். ஆனல் உலமாக்கள் என்னும் மார்க்க அறிஞர்களோ நரக நெருப்புகளை விட்டல்லவா அவர்களை காப்பாற்றுகின்றனர்...?'' என பதிலளித்தார்கள். உலமாக்களின் சிறப்புதான் என்னே! அவர்களின் அந்தஸ்துதான் என்னே! சிந்தித்து செயல்பட முன்வாருங்கள்.

★

## 13. மக்களில் கொடையாளி யார்?

ஒருநாள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தம் அருமை தோழர்களான சஹாபாக்களைப் பார்த்து எல்லோரையும்விட கொடையாளி யார் என்று அறிவீர்களா? என்று கேட்டார்கள். அப்போது சஹாபாக்கள் அல்லாஹ்வும் அவனின் தூதருமே நன்கு அறிவார்கள் என்று கூறினுர்கள். அந்நேரத்தில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்தான் எல்லோரையும்விட அதிக கொடையாளியாவான். அதற்கு பிறகு மக்கள் எல்லோரிலும் நான் கொடையாளியாவேன். எனக்கு பின் அதிகக் கொடையாளி மார்க்க கல்வியைக் கற்று அதை பிறருக்கு கற்றுக் கொடுக்கும் ஆலிமாவார். (கற்றுக்கொடுப்பது, உபதேசம் புரிவது, நூல்கள் இயற்றுவது, இவைகள் மூலம் பிறருக்கு மார்க்கத்தைப் போதிப்பவராவார்.) இத்தகைய ஆலிம் கொடையாளியாவார். இப்படிப்பட்ட ஆலிம் மறுமை நாளில் ஓர் அரசனைப்போன்று பல்லாயிரக்கணக்கான ஊழியர்களும் பிரதானிகளும் புடைசூழ அல்லாஹ்விடத்தில் வருவார் என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளினுர்கள்.

(நூல்: மிஷ்காத்)

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அருமைத் தோழர்களில் சிறந்தவர்களான ஹல்ரத் அபூதர்தா (ரலி) அவர்கள்

ஒருநாள் மக்களைப் பார்த்து மிகவும் கடுமையாக எச்சரிக்கை செய்தார்கள். மக்களே! உங்களுக்கு என்ன ஆகிவிட்டது? உங்கள் மத்தியிலிருந்து உலமாக்கள் ஒவ்வொருவராக (மௌத்தாகி) சென்று கொண்டிருக்கிறார்கள். ஆனால் பாமர மக்கள் இல்மை கற்பதில்லை. உலமாக்கள் எல்லாமே மௌத்தாவதற்கு முன்னால் மார்க்க இல்மைக் கற்றுக் கொள்ளுங்கள். (இல்லையென்றால்) பின்னால் உங்களுக்கு சரியாக கற்றுக்கொடுக்கக்கூடியவர்களும் கிடைக்கமாட்டார்கள். அல்லாஹ் பொறுப்பேற்றுக் கொண்ட (உணவு) விஷயத்திற்காக படாத பாடுபடுகின்றீர்கள். ஆனால் உங்களது பொறுப்பில் உள்ள (இல்மு, அமல்) விஷயத்திற்காக எந்த முயற்சியும் செய்வதில்லை. உங்களில் சிலர் ஜகாத்தை தண்டப் பணமாகக் கருதுவதையும், தொழுகையை பிந்தி தொழுவதையும், குர்ஆன் ஓதுவதில் பொடுபோக்குத் தனத்தையும் காண்கிறேன். (தன்பிஹுல் ஙாபிலின்)

★

## 14. நபிமார்களின் அந்தஸ்து பெற்றவர்கள் யார்?

''எனது உம்மத் (சமுதாயத்)திலுள்ள அறிஞர்கள் (உலமாக்கள்) பனீ இஸ்ராயீலர்களின் நபிமார்களைப் போலாவார்கள்,'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளினார்கள். (அல்ஹதீஸ்)

இஸ்லாமிய சமுதாயமே! பார்த்தீர்களா? உலமாக்களின் உயர் அந்தஸ்த்தை! இந்த ஹதீஸில் பல விளக்கங்கள் பொதிந்துள்ளன. ''எனது உம்மத்திலுள்ள உலமாக்கள் பனீ இஸ்ராயீலர்களின் நபிமார்களைப் போலாவார்கள்'' என்று அண்ணல் நபி (ஸல்) கூறியதிலிருந்து நமக்கு பல விளக்கங்கள் கிடைக்கின்றன. உலகில் பல சமுதாயத்திலும் நபிமார்களையும், ரசூல்மார்களையும், வல்ல இறைவன் தோன்றச்



செய்தான். அதில் பனீ இஸ்ராயீலர்கள்சமுதாயத்தில் அதிகமான நபிமார்களை தோன்றசெய்தான். ஹல்ரத் இப்ருஹீம் (அலை) அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் (1) இஸ்மாயீல் (அலை) (2) இஸ்ஹாக் (அலை). இரண்டு பேரும் நபிமார்கள் தாம், இதில் இஸ்ஹாக் (அலை) அவர்களின் சந்ததிகள் தாம் பனீ இஸ்ராயீல்கள் என்று சொல்லப்படும்.

பனீ இஸ்ராயீலர்களில் நன்மையை ஏவி, தீமையை தடுக்கும் பொறுப்பு நபிமார்களுக்கு மட்டும்தான் கொடுக்கப்பட்டிருந்தன. ஆனால் அந்த சமுதாயத்தில் உள்ள மற்ற சாதாரண மனிதர்களுக்கு அத்தகைய பொறுப்பு கொடுக்கப்படவில்லை. அதேபோல்தான் நமது உலமாபெருமக்களுக்கும் நபிமார்களுக்கு கொடுக்கப்பட்ட நன்மையை ஏவி, தீமையை தடுக்கும் பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அதனால்தான் பனீ இஸ்ராயீலர்களின் நபிமார்களின் அந்தஸ்து நமது உலமாபெருமக்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. நமது உலமா பெருமக்களுக்கு கொடுக்கப்பட்ட இத்தகைய வேலை பர்லாக அமைந்துள்ளது. நபிமார்களுக்கு பர்லாக்கப்பட்டதுபோல் உலமாக்களுக்கும் பர்லாக்கப்பட்டுள்ளது. பனீ இஸ்ராயீல்களில் வீட்டுக்கு ஒரு நபி, தெருவுக்கு ஒரு நபி, ஊருக்கு ஒரு நபி என்று அதிகமான நபிமார்கள் தோன்றினார்கள். அதே போல்தான் உம்மத்தே முஹம்மதிய்யாவில் வீட்டுக்கு ஒரு ஆலிம், தெருவுக்கு ஒரு ஆலிம், ஊருக்கு ஒரு ஆலிம் என்று அதிகமான உலமாபெருமக்கள் தோன்றி தீனுடைய வேலையை செய்கின்றார்கள்.

இத்தகைய காரணத்தால்தான் அருமை பெருமானார் (ஸல்) அவர்கள் உலமாக்களை நபிமார்களைப் போலாவார்கள், அதுவும் பனீ இஸ்ராயீல்களில் தோன்றிய நபிமார்களைப் போலாவார்கள் என்று குறிப்பிட்டு கூறியுள்ளார்கள். நபி மூஸா (அலை), நபி தாவூது (அலை), நபி சுலைமான் (அலை), நபி ஹாரூன் (அலை) போன்றவர்கள் பனீ இஸ்ராயீல்களில் தோன்றிய நபிமார்களில் குறிப்பிடத்தக்கவர்கள். ''உலமாக்கள் பனீ இஸ்ராயீல்களில் தோன்றிய நபிமார்களைப் போலாவார்கள்'' என்பதற்கு ஆதாரமாக கீழ்காணும் நிகழ்ச்சி அமைந்துள்ளது. படித்துத்தான் சுவையுங்களேன்!

நமது புனித ஸ்தலங்களில் மூன்றாவது இடமான பைத்துல் முகத்தஸிலுள்ள மஸ்ஜிதுல் அக்ஸாவில் ஹஸ்ரத் அபுல் ஹஸன் ஷாதலி (ரஹ்) அவர்கள் அயர்ந்து உறங்கி கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவர்களின் கனவில் அதிசய நிகழ்ச்சியைப் பார்த்தார்கள். அதில் செய்யதினா மூஸா (அலை) அவர்கள் அருமை பெருமானார் (ஸல்) அவர்களை நோக்கி, ''தங்களைப் பின்பற்றிய மார்க்க அறிஞர்கள் (உலமாக்கள்) பனீ இஸ்ராயீல்களில் தோன்றிய நபிமார்கள் போன்றிருக்கிறார்கள் என்று கூறி இருக்கின்றீர்களே, அது எப்படி?'' என்று கேள்வியைப் போட்டார்கள். உடனே நபி பெருமானார் (ஸல்) அவர்கள் அங்கிருந்த இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களை சுட்டிக்காட்டி ''இவர்கள் அதற்கு ஒரு சான்று'' என்று கூறினார்கள். உடனே ஸய்யதினா மூஸா (அலை) அவர்கள், இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களை ஏற இறங்கப் பார்த்துவிட்டு 'உம் பெயர் என்ன?' என்று கேட்டார்கள். அதற்கு இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் தம்முடைய பத்துத் தலைமுறைகளைக் கூறி அதன்பின் ''முஹம்மது இப்னு கஸ்ஸாலி'' என்று ஒரே தொனியில் கூறி முடித்தார்கள். ''உம் பெயரைக் கேட்டால், உம் பெயரை மட்டும் கூறினால் போதுமே! பத்து தலைமுறையினரின் பெயரைக் கூறியா சொல்லவேண்டும்?'' என்று மூஸா (அலை) அவர்கள் கேட்டார்கள்.

உடனே இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களை நோக்கி, ''தூர் ஸீனாவில் அல்லாஹ் தங்களை நோக்கி, 'உமது வலது கரத்தில் என்ன உள்ளது?' என்று கேட்க, 'கைத்தடி' என்று ஒரே சொல்லில் மறுமொழி பகர்வதற்குப் பதிலாக அதைப் பற்றி ஏதேதோ விளக்கம் பகரத் துவங்கிவிட்டீர்களே! அது மட்டும் என்ன!'' என்று பதில் சொல்ல, இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் தம் பேச்சை முடிக்கும்முன் அவர்களின் விலாவில் 'அதபு' என்று கூறி அருமை பெருமானார் (ஸல்) அவர்கள் தங்களின் விரல்களால் குத்த அவர்கள் மேற்கொண்டும் பேசாது வாய் மூடி கொண்டார்கள். இப்படியாக கனவு கண்டு விழித்தார்கள், இச்சம்பவத்திலிருந்து உலமாக்கள் பனீ இஸ்ராயீல்களில் தோன்றிய நபிமார்களுக்கு சமமாவார்கள் என்பது தெள்ளத் தெளிவாக விளங்குகிறது.

★

# 15. உலமாக்களின் முகத்தை பார்ப்பது இபாதத்து

ஓர் ஆலிமுடைய முகத்தைப் பார்ப்பதும் இபாதத் (வணக்கம்) ஆகும் என்று அருமை பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (அல்ஹதீஸ்)

இப்ராஹீம் இப்னு யூசுப் (ரஹ்) அவர்கள் ஒரு சிறந்த ஆலிமாவார்கள். அவர்களின் முகத்தை ஒரு பெண் கூர்ந்துப் பார்த்து கொண்டே இருந்தாள். இதை திடீர் என பார்த்து விட்ட இப்ராஹீம் இப்னு யூசுப் (ரஹ்) அவர்கள் ''ஏன்? என் முகத்தைப் பார்க்கிறாய்?'' என்று அப்பெண்ணிடம் வினவினார்கள். 'ஓர் ஆலிமுடைய முகத்தைப் பார்ப்பது இபாதத் (வணக்கம்) ஆயிற்றே, எனவே பார்த்தேன்' என்று அப்பெண்மணி பதில் கூறினாள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் முகத்தை ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் கண் சிமிட்டாமல் பக்தியோடு பார்த்துக் கொண்டே இருப்பார்கள். இதை அடிக்கடிப் பார்த்த அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் தம் தந்தை அபூபக்கர் (ரலி) அவர்களிடம் வினவ, 'அலீயின் முகத்தைப் பார்ப்பது கூட இபாதத்துதான்' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூற நான் கேட்டிருக்கின்றேன் என்று அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் விளக்கம் கூறினார்கள்.

சமுதாய பொதுமக்களே! கண்ணியம் பொதிந்த உலமா பெருமக்களின் முகத்தைப் பார்ப்பது கூட வணக்கம் என்றால், அவர்களின் உயர் அந்தஸ்துகளை சிந்தித்துப் பாருங்கள். ஓர் ஆலிமின் முகத்தைப் பார்த்து சந்தோஷப்பட்டால் அல்லாஹ் அந்தப் பார்வைக்கும், சந்தோஷப் பட்டதற்கும், ஒரு மலக்கைப் படைத்து விடுவான். கியாமத் நாள் வரை அம்மலக்கு அம்மனிதருக்கு பாவமன்னிப்புத் தேடிக் கொண்டிருக்கிறார். (அல்ஹதீஸ்)

★

# 16. "இஸ்லாமிய சமூகத்தின் இருதயங்கள்"

"முஃமினான மக்களில் சிறந்தவர்கள் ஆலிம்கள்தாம்" என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.
(அல்ஹதீஸ்)

முஸ்லிம்கள் என்ற உடலில் உலமாக்கள் அதன் இருதயத்தின் அந்தஸ்த்தில் இருக்கின்றார்கள். எனவே உலமாக்களின் சீரான இயக்கமும், அமைப்பும், தனி மனித உடலிலுள்ள திருந்திய இதயம் எவ்வாறு அந்த மனிதனை நேரான வழிக்கு கொண்டு வந்து அவனுக்கு முன்னேற்றம் அளிக்கிறதோ, அதே போல்தான் இஸ்லாமிய சமுதாயத்தின் இருதயமாக உள்ள உலமாக்களின் சீரான போக்கும் இயக்கமும் சமுதாயத்தை திருத்தவும் முன்னேற்ற பாதையில் இழுத்துச் செல்வதற்கும் உதவியாக இருக்கிறது. பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "மனித உடலில் ஒரு மாமிசப் பிண்டமுள்ளது, அது சீர் பெற்றுவிட்டால் உடம்பு முழுவதும் சீர்பட்டுவிடும். அது கெட்டுவிட்டால் உடம்பு முழுவதும் கெட்டுபோய்விடும். அது என்ன தெரியுமா? அதுதான் இருதயம்" என்று. "எனது உம்மத்திலுள்ள இரண்டு பிரிவினர்கள் அவர்கள் திருந்திவிட்டால் உம்மத்தும் திருந்திவிடுவார். அவர்கள் கெட்டுவிட்டால், உம்மத்தார்களும் கெட்டுப் போய்விடுவார்கள். அவர்கள்தாம் உலமாக்களும், அதிகாரிகளும்" என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

ஆகவே முஸ்லிம்கள் ஓர் உடலாக இருந்தால் அதன் இதயமாக உலமா பெருமக்கள் திகழ்கின்றார்கள். இதயத்தின் அந்தஸ்த்தைப் பெற்ற உத்தம உலமாக்களின் உயர் அந்தஸ்த்தை மறக்கமுடியுமா? மறுக்கத்தான் முடியுமா? இஸ்லாமிய சமுதாயத்திற்கு இதயபீடமாக அமைந்துள்ள உலமாபெருமக்களின் சொல்லுக்கு இந்த சமுதாயம் கட்டுப்பட்டு நடப்பதில்தான் வெற்றி இருக்கிறது.

★

# 17. "உலமாக்களை நேசியுங்கள்"

கஃபுல் அஹ்பார் (ரலி) அறிவிக்கின்றார்கள்:

"எவர் உலமாக்களை நேசிக்கின்றாரோ அவரின் ஜீவிய காலத்திலேற்படும் சிறு பாவங்கள் பட்டோலையில் எழுதப் படமாட்டாது." என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.
(அல்ஹதீஸ்)

கியாமத்து நாளில் அகில உலக மக்கள் அனைவரும் கூடி இருக்கும் நேரத்தில், அவர்களுக்கு மத்தியில் வல்ல இறைவன் தீர்ப்பு கூறுவான். அந்நேரத்தில் ஒரு மனிதருடைய நன்மை, தீமைகளை கணக்கிடும்படி மலக்குகளுக்கு உத்திரவிடுவான். அதன்படி மலக்குகள் கணக்கிட்டுப் பார்க்கும்போது நன்மைகளைப் பார்க்கினும் தீமைகளே அதிகமாகத் தெரியும். அதற்காக அம்மனிதரை நரகத்திற்கு அழைத்துச் செல்லுமாறு வல்ல இறைவன் கட்டளையிடுவான். அதன்படி ஹஸ்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் அம்மனிதனை நரகத்திற்கு அழைத்து சென்று கொண்டிருக்கும்பொழுது அம்மனிதரிடம் கீழ்வரும் கேள்விகளை கேட்கும்படி ஹஸ்ரத் ஜிப்ரயீல் [அலை] அவர்களுக்கு கட்டளையிடுவான். அதற்கேற்றவாறு கீழ்கண்டவாறு உரையாடல் நடக்கும். அந்த உரையாடலை நாமும் கேட்டு மகிழ்வோம், வாருங்கள்:

ஜிப்ரயீல் [அலை]:- மனிதா! நீ உலமாக்களின் சபைகளிலே உட்கார்ந்திருந்ததுண்டா?

மனிதன்:- நான் உட்கார்ந்திருக்கவில்லை.

ஜிப்ரயீல் [அலை]:-உலமாக்களுடன் உட்கார்ந்து உணவு உண்டதுண்டா?

மனிதன்:- நான் அவர்களிடம் உட்கார்ந்து உணவருந்தியதில்லை.

ஜிப்ரயீல் [அலை]:- மனிதா! நீ உலமாக்கள் வசித்த ஊரிலாவது வசித்திருந்திருக்கிறாயா?

மனிதன் :- நான் வசித்ததில்லை.

ஜிப்ரயீல் (அலை):-மனிதனே! நீ உலமாக்கள்குடியிருந்த தெருவிலாவது குடியிருந்திருக்கிருயா?

மனிதன் :- நான் குடி இருக்கவுமில்லை.

ஜிப்ரயீல் (அலை) :- மனிதனே ! நீ உலமாக்களை நேசித்திருக்கிருயா?

மனிதன் :-நான் உலமாக்களை நேசிக்கவில்லை.

ஜிப்ரயீல் (அலை) :- மனிதா! நீ உலமாக்களை நேசித்தவரையாவது நேசித்திருக்கிருயா?

மனிதன் :- ஆம் நான் நேசித்திருக்கிறேன்.

இந்த உரையாடலை பார்த்து கொண்டிருந்த வல்ல இறைவன் ஜிப்ரயீல் (அலை) அவர்களை நோக்கி ஜிப்ரயீலே! இம்மனிதன் உலமாக்களை நேசித்த மனிதனை நேசித்தக் காரணத்தால் இவனை நான் மன்னித்து விட்டேன். ஆகையால் இம்மனிதனை சுவர்க்கத்திற்கு அழைத்து செல்வாயாக என்று கட்டளை இடுவான். கேட்டீர்களா! அற்புத உரையாடலை! நரகவாதி என்று தீர்ப்பு செய்யப்பட்ட மனிதன் உலமாக்களை நேசித்தவரை நேசித்ததின் காரணத்தால் மன்னிக்கப்பட்டு சுவனம் சென்ருர் என்ருல், உலமாக்களை நேசித்தால் எவ்வளவு பெரிய அந்தஸ்துகளை அடையலாம் என்பதை சிந்தனை செய்து பாருங்கள். அகிலத்தின் வழிகாட்டிகளான உலமா பெருமக்களை நேசியுங்கள், இரு உலகிலும் இன்ப வாழ்வை எய்தப் பெறுங்கள்.

ஹல்ரத் செய்யதினு இப்ருஹீம் [அலை] அவர்கள் கூறினூர்கள்: நான் ஆலிமாக உள்ளேன். ஆலிமை பிரியம் வைக்கின்றேன் என்று.

★

# 18. ஆபிதை விட ஆலிம்களுக்கு ஏன் சிறப்பு?

ஒரு சமயம் கஃபாவில் இரு கூட்டங்களாக சஹாபாக்கள் அமர்ந்திருந்தார்கள். ஓர் கூட்டத்தினர் இறை தியானத்தில் தங்களை மறந்து திக்ரு செய்து கொண்டிருந்தார்கள். மற்ரெரு கூட்டத்தினர் தாம் கற்றக் கல்வியை மற்றவர்களுக்கு போதித்து கொண்டிருந்தார்கள். அது சமயம் அங்கு வருகை தந்த அண்ணல் நபி (ஸல்) அவர்கள், கற்ற கல்வியை மற்றவர்களுக்கு கற்று கொடுக்கும் கூட்டத்தாரில் அமர்ந்து கொண்டார்கள். இதைப் பார்த்த சஹாபாக்கள் நபி (ஸல்) அவர்களிடம் விளக்கம் கேட்க இறை தியானத்தில் இருப்பதைக் காட்டிலும் கற்ற கல்வியை மற்றவர்களுக்கு போதிப்பதே சிறந்தது என்று கூறினூர்கள்.

ஆபிதைவிட ஆலிமின் சிறப்பாகிறது; உங்களில் தாழ்ந்தோர்களில் என்னுடைய சிறப்பைபோல என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். மேலும் சொன்னூர்கள், ஆபிதைவிட ஆலிமின் சிறப்பாகிறது (வானத்தில் மின்னும்) எல்லா நட்சத்திரங்களைவிட சந்திரனின் சிறப்பைபோன்றதாகும் என்று. ஆகவே ஆபிதுகளை (வணக்கசாலிகள்) விட ஆலிம்கள் சிறந்தவர்கள் என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியது எதைக் காட்டுகிறது என்ருல், கல்விமான்கள் ஒளிபோன்றவர்கள், ஒளி எவ்வாறு இருளை விரட்டியடித்து விடுகிறதோ? அதே போன்று கல்வி நம் வாழ்க்கையை ஒளிமயமாக்கி விடுகிறது. மேலும் கற்றல் என்பது சாதாரண செயல் அன்று. அதனைக் கற்றவர்கள் சாதாரண

ஆட்களல்ல என்று நாம் உணர வேண்டும். இதன் அடிப்படையில்தான் அருமை பெருமானார் (ஸல்) அவர்கள் இப்னு மஸ்வூது (ரலி) அவர்களைப் பார்த்து இல்முடைய மஜ்லிஸில் பேனாவைத் தொடாமல் ஓர் எழுத்தும் எழுதாமல் வெறுமனே உட்கார்வது 1000 அடிமைகளை உரிமை விட்ட நன்மை கிடைக்கும் என்று கூறினார்கள். இதன் அடிப்படையில்தான் ஹஸ்ரத் லுக்மான் (அலை) அவர்கள் தம் மகனுக்கு உபதேசம் செய்யும் பொழுது, மகனே! உலமாக்களின் மஜ்லிஸில் அதிகமாக உட்கார்ந்துகொள். ஹக்கீம்களுடைய பேச்சுகளை மிகக் கவனமாக கேள்; அல்லாஹ் செத்துவிட்ட பூமிக்கு பெரும் மழை மூலம் உயிர் கொடுப்பதுபோல் செத்த உள்ளங்களுக்கு ஹிக்மத்தின் ஒளியால் உயிர் கொடுக்கிறான் என்று கூறினார்கள் மேலும் கூறினார்கள்: மகனே! உலமாக்களிடத்தில் விரோதம் கொள்ளாதே! பிறகு அவர்கள் உன்னை விட்டு விலகி கொண்டால் அவர்களின் ஹிக்மத்துகளை அறிய முடியாதவனாக ஆகிவிடுவாய். மகனே! தனது சொந்தக்காரியங்களிலும் உலமாக்களிடம் ஆலோசனை செய்து கொள்.

இதன் அடிப்படையில்தான் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள்:- கல்வி என்பது மாபெரிய (கஜானா)கருவூலமாகும். அவைகளின் திறவுகோல் அறிஞர்களான உலமா பெருமக்களிடம் கேட்பதாகும். மக்களே! நீங்கள் ஆலிம்களிடம் கேட்டுக் கொண்டே இருங்கள். இறைவன் உங்கள்பால் அருள் புரிந்துகொண்டே இருப்பான். அண்ணல் நபி (ஸல்) அவர்களிடத்தில் பனீ இஸ்ராயீல்களின் கூட்டத்தாரில் உள்ள இரண்டு மனிதர்களைப் பற்றி கேட்கப்பட்டது. அந்த இரண்டு பேரில் ஒருவர் ஆலிம், அவர் பர்லான தொழுகையை மட்டும் தொழுதுவிட்டு மக்களுக்கு மார்க்க சம்பந்தப்பட்ட கல்வியை போதித்து கொண்டிருக்கிறார். நபிலான, சுன்னத்தான தொழுகையெல்லாம் தொழுவதே இல்லை. நபிலான நோன்புகளும் பிடிப்பதில்லை. ஆனால் மற்றொருவர் இரவெல்லாம் அயராது நின்று வணங்குவார். பகலெல்லாம் சலிக்காமல் நோன்புடன் இருந்து வருவார். சுன்னத்தான, நபிலான எல்லா அமல்களையும் தவறாது செய்து வருவார். அவர்தான் ஆபித்(வணக்கவாளி)இந்த இரு நபர்களில் மிகச் சிறந்தவர் யார்? என்று வினா எழுப்பப்பட்டது. அப்



பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள்: 'உங்களில் மிகத் தாழ்ந்தவரைக்காண எனக்கு எவ்வளவு சிறப்பு இருக்கின்றதோ, அத்தகைய சிறப்பு இரவெல்லாம் நின்று வணங்கி பகலெல்லாம் நோன்பு நோற்ற ஆபிதைக்காண, பர்ளை மட்டும் தொழுது விட்டு மக்களுக்கு மார்க்கக் கல்வியைப் போதிக்கும் ஆலிமுக்கு அந்தஸ்து இருக்கிறது' என்று திருவாய் மலர்தருளினார்கள்.

★

## 19. "உலமாக்களின் தூக்கம் ஓர் இபாதத்து"

ஒருநாள் அருமை பெருமானார் (ஸல்) அவர்கள் தமது பள்ளிவாசலுக்கு வந்தபோது, ஷைத்தான் பள்ளியில் கவலையாக நின்று கொண்டிருப்பதைப் பார்த்தார்கள். உடனே, அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஷைத்தானைப் பார்த்து, 'ஓ... ஷைத்தானே! என்ன செய்து கொண்டுள்ளாய்?' என்று வினவினார்கள். 'பள்ளியில் தொழுது கொண்டிருக்கும் அந்த மனிதரை நான் கெடுக்க நாடுகிறேன்' என்று மறுமொழி பகர்ந்து, 'என்றாலும் அதோ... தூங்கிகொண்டிருக்கும் மனிதனை பார்த்தேன், எனக்கு பயமாக உள்ளது. ஆகவே பயந்து கொண்டு நிற்கிறேன்' என்றான் ஷைத்தான். அதற்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள், 'இப்லீஸே! தொழுது கொண்டிருக்கும் அம்மனிதனைப் பார்த்து பயம் கொள்ளாமல் தொழாமல் அயர்ந்து உறங்கி கொண்டிருக்கும் இந்த மனிதனைப் பார்த்து ஏன் பயம் கொள்கிறாய்' என்று கேட்டார்கள்.

அப்பொழுது ஷைத்தான், "தொழும் மனிதர் ஒன்றும் அறியாத ஜாஹில், அவரை வழி கெடுப்பது மிக மிக எளிது. அவருக்கு நான் ஏன் பயம் கொள்ளவேண்டும். தூங்குகின்றாரே அவர் ஆலிம் (மார்க்க கலையை கற்று தேர்ந்தவர்),

இவர் தொழுகையை பசாதாக்கினால், இந்த ஆலிம் விழித்து கொண்டால் உடனே திருத்திக் கொடுத்து விடுவாரே! அவர் அறியாததை இந்த ஆலிமின் மூலம் அறிந்து அல்லவா கொள்வார் என்ற பயத்தால் நான் நின்று கொண்டிருக்கிறேன்' என்று சுவைபட கூறினான். இப்பொழுதுதான் அருமை பெருமானார் (ஸல்) அவர்கள், 'ஜாஹிலின் (அறியாதவரின்) இபாதத்தைவிட மார்க்கத்தை அறிந்த ஓர் ஆலிமின் தூக்கம் சிறந்தது' என்று கூறினார்கள். மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள்: "ஒரு விளக்கமுள்ள ஆலிம் (அறிஞர்) ஷைத்தானுக்கு ஆயிரம் வணக்கம் செய்யக்கூடிய ஆபிதுகளைவிட மிகக் கடினமானவராக இருக்கின்றார்" என்று திருவாய் மலர்ந்தருளினார்கள்.

காரணம் ஷைத்தான் செய்யும் சூழ்ச்சிகளையும், தந்திரங்களையும் அவனின் மாயாஜாலங்களையும் தமது கல்வியின் காரணத்தால் துல்லியமாக விளங்கி தன்னைப் பாதுகாத்துக் கொள்கின்றார். ஆனால், அறியாத பாமரனோ ஷைத்தானின் சூழ்ச்சிகளை அறியாமல் எது நேரான வழி, எது தீய வழி என்று கூடப் பார்க்காமல் மார்க்கத்தில் தவறான செயல்களை செய்து விடுவார். ஷைத்தான் அவர்களை மிகமிக லேசாக தம் வலையில் சிக்க வைத்து விடுவான். ஹல்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒரு பாதை வழியாக சென்று கொண்டிருப்பதைப் பார்த்தால், ஷைத்தான் பயந்தவனாக-நடுங்கி அடுத்த பாதை வழியாக ஓடி மறைவான் என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் உமர் (ரலி) அவர்களைப் பார்த்து கூறியது இதற்கு சான்றாக உள்ளது என்பதை நாம் அறிந்து கொள்ளவேண்டும்.

★

# 20. "ஆலிம்களின் எழுத்தின் மகத்துவம்"

கியாமத் நாளில் ஷுஹதாக்களின் இரத்தத் துளிகளையும், உலமாக்களின் பேனா மைத்துளிகளையும் நிறுக்கப்படும் போது உலமாக்களின் பேனா மைத்துளிகளே கனமானதாக இருக்கும் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளினார்கள். அரசர்களின் சபைகளில் அக்காலத்தில் ஆலிம்கள் அதிகமாக இருந்து வந்தார்கள். அரசர்களின் சந்தேகங்களுக்கும், மற்றும் மார்க்க சம்பந்தப்பட்ட விஷயங்களுக்கும் சரியான மார்க்கத் தீர்ப்புகளை எடுத்து கூறி வந்தார்கள்.

தைமூர்லங் என்ற அரசர் அக்காலத்தில் சிறந்த மன்னராக திகழ்ந்து வந்தார். ஒருநாள் மன்னர் தைமூர்லங் தமது போர் வீரர்களில் ஒருவனை அழைத்து அவனது கையில் ஓர் இரகசிய ஓலையைக் கொடுத்து அன்னிய நாட்டு அரசரிடம் கொடுத்து வருமாறு ஏவி "இவ்வோலை முக்கியமான விஷயத்தை தாங்கி இருப்பதால் வெகு சீக்கிரமாக கொண்டு செல்! ஊருக்குள் சென்று உன் கண்ணுக்குத் தென்படும் வாகனங்களில் ஒன்றைப் பிடித்துக் கொண்டு அதன் மீது செல்ல உனக்கு அதிகாரம் உண்டு" என்று கூறி உடன் அனுப்பி வைத்தார். வெகு வேகமாக ஊருக்குள் நுழைந்த அப்போர்வீரன் அங்கே மேய்ந்து கொண்டிருந்த ஒரு குதிரையைப் பிடிக்க இதைப் பார்த்த குதிரையின் உரிமையாளர் உடனே ஓங்கி வீரனை அடித்து விட்டார். இதற்கிடையில் அப்போர் வீரன் அரசரின் ஆணையை எவ்வளவோ, அந்த குதிரையின் உரிமையாளரிடம் எடுத்துக் கூறியும் அவர் ஏற்றுக் கொள்வதாயில்லை. உடனே அரசரிடம் ஓடோடி வந்து நடந்த விஷயத்தைக் கூறி முறையிட்டான். இதையறிந்த அரசர் எரிமலைபோல் குமுறினார்! 'யார் அந்த மனிதர்?' என்று ஆவேசமாக அரசர் கேட்க "அது இமாம் தஃப்தா ஜானி (ரஹ்) அவர்களின் குதிரை" என வீரன்

பதிலளித்தான். இவ்வார்த்தையை கேட்ட அரசர் பெட்டியில் அடங்கிய பாம்பைப்போல மௌனமாகி விட்டார்.

இந்நிகழ்ச்சியை இமை கொட்டாது பார்த்துக் கொண்டிருந்த அமைச்சர்களெல்லாம் "அரசே! அந்த மனிதரைப் பிடித்து வந்து தண்டனை வழங்க வேண்டும்" என்று கோபக் கனல் தெறிக்க கூறினார்கள். அரசர் கூறினார் 'அமைச்சர்களே! பணத்தால் கொழுத்து திமிர் பிடித்தலைபவனையும், படை பலத்தால் அகங்காரம் கொண்டு அலைபவனையும், நாட்டிலுள்ள அனைவர்களையும் அடக்கியாளும் வல்லமை எனக்குண்டு! ஆனால் இந்த தஃப்தா ஜானி எனும் ஆலிமை அடக்க எனக்கு வல்லமை இல்லை. என்னால் அது முடியாது. ஏனென்றால் எனது வாள் முனை ஆட்சி செய்யாத இடத்திலெல்லாம் இமாம் தஃப்தா ஜானியின் பேனா முனை ஆட்சி செய்கிறது' என்று சுடச்சுட பதில் கூறினார்.

பார்த்தீர்களா! உலமாக்களின் பேனா மைத்துளிக்கு உள்ள மகிமையை! மன்னர் தைமூர்லங் அவர்களின் ஆட்சியில் யாரும் யாருடைய பொருளையும் அனுமதி இன்றி எடுக்கக் கூடாது என்ற சட்டம் இல்லாமல் இருந்தது. இந்த நிகழ்ச்சிக்குப் பிறகுதான் அடுத்தவர்களின் பொருளை அனுமதியுடன்தான் உபயோகிக்க வேண்டும் என்ற சட்டத்தை கொண்டு வந்தார் மன்னர். ஸுல்த்தான் ஸன்ஜர்ஸுலுகி என்ற அரசர் தம்முடைய மாகாண ஆளுநர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில்: "உம்முடைய சபையில் மார்க்க அறிஞர்களான உலமாப் பெருமக்கள் இல்லையென அறிகிறோம். உம்முடைய பணியாட்கள் கெட்ட குணமுள்ளவர்கள் எனவும், உம்முடைய கண்காணிப்பாளர்கள் கோபம் மிகுந்தவர்கள் என்றும், தேவையுடையவர்கள் உம்மிடம் நிராசையடைந்து விட்டனர் என்பதாகவும், உம்முடைய செல்வமோ பெட்டகத்தில் இருக்கிறது. உம்மை குறை கூறுபவர்களோ, சிறையில் இருப்பதாகவும் அறிகிறோம். எனவே உம்மை கவர்னர் பதவியிலிருந்து நீக்குகிறோம்" என்று எழுதி அனுப்பினார்கள்,

# 21. "உலமாக்களின் தனிச்சிறப்புகள்"

உலமாப் பெருமக்களுக்கு பொதுவான சிறப்புகள் பல இருந்தாலும் அவர்களுக்கு தனிச்சிறப்புகள் பல உள்ளன. அவைகளில் சிலதை இனி பார்ப்போம் : அல்லாஹ், வேதங்களுக்கு குர்ஆனைக் கொண்டு அலங்கரித்தான். குர்ஆனுக்கு பிஸ்மில்லாஹ்வைக் கொண்டு அலங்கரித்தான். நபிமார்களுக்கு நபி (ஸல்) அவர்களைக் கொண்டு அலங்கரித்தான். மலக்குகளுக்கு ஜிப்ரயீல்(அலை) அவர்களைக் கொண்டு அலங்கரித்தான். இரவுகளுக்கு லைலத்துல் கத்ரு இரவைக்கொண்டு அலங்கரித்தான். வானத்தை நட்சத்திரங்களைக் கொண்டு அலங்கரித்தான். சுவர்க்கத்தை ஹூருல் ஈன்களைக் கொண்டு அலங்கரித்தான். பூமியை விருட்சத்தைக் கொண்டு அலங்கரித்தான். மாதங்களுக்கு ரமளான் மாதத்தைக் கொண்டு அலங்கரித்தான். பள்ளிக்கு கஃபாவைக் கொண்டு அலங்கரித்தான். மனிதர்களுக்கு உலமாக்களைக் கொண்டு அலங்கரித்தான். ஆலிம்களுக்கு அவ்லியாக்களைக் கொண்டு அலங்கரித்தான். நாட்களுக்கு ஜும்ஆவைக் கொண்டு அலங்கரித்தான்.

துன்யா நிலைத்து நிற்பது நான்கு காரியங்களினால் தான்: (1) உலமாக்களின் கல்வி, (2) பணக்காரர்களின் தர்மம், (3) ஏழைகளின் துஆ, (4) தலைவர்களின் நீதம். உலமாக்களின் கல்வி இல்லையென்றால், மனிதர்கள் அழிவார்கள். பணக்காரர்களின் தர்மம் இல்லையென்றால், ஏழைகள் அழிவார்கள். ஏழைகளின் துஆ இல்லையென்றால், பணக்காரர்கள் அழிவார்கள். தலைவர்களின் நீதம் இல்லையென்றால், மனிதன் ஒருவன் மற்றவனை சாப்பிட்டு விடுவான், ஓநாய், ஆட்டைச் சாப்பிடுவதைப்போல!

பத்துபேர்களின் உடலை மண் சாப்பிடாது. அந்த உடல் மக்கிப்போகாது. அவர்கள்: (1) போர் செய்யக் கூடியவர்கள், (2) உலமாக்கள், (3) குர்ஆனை மனனம் செய்த ஹாபிள்கள், (4) முஅத்தின்கள், (5) நபிமார்கள், (6) அல்

லாஹ்வின் பாதையில் ஷஹீதானவர்களான ஷுஹதாக்கள், (7) நிபாஸ் உடைய காலத்தில் இறந்த பெண்மணிகள். (8) அநியாயமாக கொல்லப்பட்டவர்கள். (9) நபி பெருமானார் (ஸல்) அவர்களின் சுன்னத்துக்களை முழுவதும் பின்பற்றக் கூடியவர்கள். (10) ஜும்ஆ தினத்தன்று இறந்தவர்கள்.

பூமியில் அலங்கரிக்கப்பட்டவர்கள் நான்கு பேர்கள்: 1) உலமாப் பெருமக்கள், 2) ஷுஹதாக்கள், 3) அவ்லியாக்கள், 4) அத்திகியாக்கள் (இறைவனை பயப்படக் கூடியவர்கள்). அரசர்கள் மனிதர்களை ஆட்சி செய்கின்றனர்கள். உலமாக்கள் அரசர்களை ஆட்சி செய்கின்றார்கள். மனிதர்கள் என்றால் யார்? என்று இப்னு முபாரக் (ரஹ்) அவர்களிடம் கேட்கப்பட்டதற்கு உலமாக்கள் என்று கூறினர்கள். உலமாக்கள் காலத்தின் கலங்கரை விளக்கங்கள் என்று ஒரு ஞானி கூறுகின்றார்கள். ஒவ்வொரு ஆலிமும் அவர்களின் காலத்தின் மக்களுக்கு ஒளி கொடுக்கக் கூடியவர்கள் என்று ஞானி ஒருவர் கூறுகின்றார்கள். உலமாக்கள் ஒளி வீசும் விண்மீன்கள் என்று ஒரு பெரியார் கூறுகின்றார்கள். ஓர் ஆலிம் ஒரு நாட்டுக்கு தலைவராக இருக்க வேண்டும், அல்லது ஒரு மாநிலத்திற்கு தலைவராக இருக்க வேண்டும், அல்லது ஒருமாவட்டத்திற்கு தலைவராக இருக்க வேண்டும், அல்லது ஒரு தாலுக்காவிற்கு தலைவராக இருக்க வேண்டும். அல்லது ஒரு ஊருக்கு தலைவராக இருக்கவேண்டும் அல்லது ஒரு தெருவுக்கு தலைவராக இருக்க வேண்டும் என்று ஞானிகள் கூறுகின்றார்கள்.

மார்க்க கல்வி என்பது ஒரு நதி. நுண்ணறிவு என்பது ஒரு கடல். அறிஞர்கள் (உலமாக்கள்) நதியின் நாலா பக்கங்களிலும் சுற்றிக்கொண்டே இருக்கிறார்கள். நுண்ணறிவாளர்கள் கடலின் நடுவிலே மூழ்கிக் கொண்டு இருக்கின்றார்கள். ஞானிகள் ஈடேற்றம் என்ற கப்பலிலே அமர்ந்து கொண்டு கடலிலே பயணம் செய்து கொண்டே இருக்கிறார்கள் என்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். அதிகாலையில் கல்வி கற்பதற்காகச் செல்வது நூறு ஜிஹாத் அறப்



போரைக் காண அதிக நன்மை தரக் கூடியதாக இருக்கிறது. ஒருவர் கல்வி பயில புறப்படுவாராயின் ஒரு மலக்கு அவருடன் சேர்ந்து கொள்கிறார். அவருக்கு அந்த மலக்கு சொர்க்கத்தைக் கொண்டு சுப செய்தி கூறிக் கொண்டே இருக்கிறார். -(முஸ்தத்ரப்.)

ஒரு தடவை சஹாபாக்களான அம்ருப்னு கஃபு (ரலி) அவர்களும், அபூஹுரைரா (ரலி) அவர்களும் நபி பெருமானார் (ஸல்) அவர்களிடம் ''மனிதர்களில் யார் அறிஞர்?'' என வினா விடுத்தார்கள். அதற்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அறிவாளி என்று கூறினார்கள். மீண்டும், 'மனிதர்களில் வணங்கக் கூடியவர்கள் யார்?' எனக் கேட்டார்கள். அதற்கு அருமை பெருமானார் (ஸல்) அவர்கள் அறிவாளி (ஆலிம்) என்று கூறினார்கள். மீண்டும் 'மக்களில் சிறந்தவர்கள் யார்?' என்று கேட்டார்கள். அதற்கு பூமான் நபி (ஸல்) அவர்கள் அறிஞன் (ஆலிம்) என்று கூறினார்கள். ''ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு அடையாளமுண்டு, முஃமின்களுக்கு அடையாளம் அறிவு. ஒவ்வொரு சமூகத்திற்கும் ஒரு பாதுகாப்பு உண்டு, முஃமின்களுக்கு பாதுகாப்பு அறிவு. ஒவ்வொரு சமூகத்திற்கும் ஒரு எல்லையுண்டு, மனிதர்களுக்கு எல்லை அறிவு'' என்று கூறினார்கள். இரவில் சிறிது நேரம் மார்க்க கல்வியை கற்பதும், கற்றுக் கொடுப்பதும் இரவு முழுவதும் நின்று வணங்குவதைக் காண சிறந்தது ஆகும் என்று இப்னு அப்பாஸ் (ரலி) கூறுகின்றார்கள்.

ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் அல்லாஹ் நோக்கி 'இறைவா! உன்னிடத்தில் எல்லோரையும் விட அதிக அன்புடையவர் யார்?' எனக் கேட்டார்கள். அப்பொழுது இறைவன் 'யார் எனது மார்க்கத்தின் கலையை கற்கிறாரோ அவர் (ஆலிம்) தான் என்னிடத்தில் அதிக அன்புள்ளவர்' என்று பதில் கூறினான். -(முஸ்தத்ரப்)

'நீ அறிஞர்களுடன் அமர்ந்திரு, அவர்களுடன் உனது முட்டுக்கால்களை இணைத்து வை, ஏனெனில் இறைவன்

பூமியை மழையால் பசுமையாக்கி வைப்பது போன்று இத யங்களை மார்க்க ஞானத்தின் மூலம் பிரகாசிக்கச் செய்கின் றான்' என்று ஹல்ரத் லுக்மான் (அலை) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்கள். எவர் மார்க்கக் கல்வியை கற்று அதன்படி அமல் செயல் புரிகின்றாரோ, அவர் இறைவனை நெருங்கியிருக்கும் மலக்குகளுடன் எண்ணப்படுவார்-(முஸ் தத்ரப்). சொர்க்கத்தின் வாசலிலே பழம் பழுக்கக்கூடிய ஒரு மரம் இருக்கிறது. அந்த மரத்தின் அடியில் ஓர் ஊற்று இருக்கிறது. அந்த ஊற்றின் நீரை கல்வி கற்போரும், பிற ருக்கு போதிப்போரும் பருகுவார்கள். அத்தண்ணீர் பாலைப் போன்று வெண்மையாகவும், இன்பமாகவும் இருக்கும். மற்ற மக்களெல்லாம் தாகத்தால் தத்தளித்துக் கொண்டிருக் கும் பொழுது (அத்தண்ணீரை) மார்க்க அறிஞர்களான உலமாக்களும், மாணவர்களான தாலிபுல் இல்முகளும் பருகு வார்கள் என்று ஹல்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார் கள். ஓர் அறிவாளி தான் அறிவாளி என்று தர்க்கம் செய்வ தும், யாராவது அவனை ஆலிம் (அறிஞர்) என்று கூறிவிட் டால் அவன் மிக்க மகிழ்ச்சி அடைவதுமே கல்வியின் சிறப் புக்கு போதிய சான்றாகும் என்று ஹல்ரத் அலீ (ரலி) கூறி யுள்ளார்கள்.

அறிஞன் அறிவிலியை அறிந்து கொள்வான். ஆனால் அறிவிலி அறிஞனை அறிந்து கொள்ள மாட்டான். ஏனெ னில் அறிஞன் முதலில் அறிவிலியாக இருந்தான். ஆனால் அறிவிலியோ முதலில் அறிவாளியாக இருக்கவில்லை. யாரா வது ஒரு மனிதன் ஒரு ஆலிமிடம் ஏதாவது ஒரு விளக்கம் கேட்டுக்கொண்டிருந்தால் நீங்கள் முந்திக்கொண்டு விளக்கம் சொல்லாமல் அந்த ஆலிமையே விளக்கம் கூற வேண்டிக் கொள்ளுங்கள். நீங்கள் விளக்கம் கூறினால், அந்த ஆலிமை யும், கேட்பவரையும் இழிவுபடுத்தியவராவீர். எவர் உல மாக்களுக்கு பணிவிடை செய்கின்றாரோ அவருக்கு மற்றவர் கள் பணிவிடை செய்வார்கள். ஓர் ஆலிம் மலைப் பகுதியில் நடந்து கொண்டிருந்தார். இரவு நேரமாக இருந்ததால் அப்பகுதியில் பாம்புகள் நடமாடிக் கொண்டிருந்தன. அந்த ஆலிம் போன வேகத்தில் ஒரு பாம்பின் மீது கால் வைத்து மிதித்துவிட்டார். உடனே அப்பாம்பு அந்த



ஆலிமை தீண்டிவிட்டது. உடனே தீண்டிய பாம்பு துடித் துடித்து நுரை நுரையாக கக்கி அந்த இடத்திலேயே இறந்துவிட்டது. பார்த்தீர்களா! உலமாக்களின் இரத்தம் கூட உடம்புகூட விஷம்போல் உள்ளது. மனிதன் இறப்ப தற்கு பதிலாக கொத்திய பாம்பே இறந்து விட்டது என்றால், உலமாக்களின் சிறப்புகளை விவரிக்கத்தான் முடியுமா?

## 22. உலமாக்களின் வீரம்!

உலமாக்களுக்கு சிறப்பு என்ற ரீதியில் 1000 ஷஹீது களைவிட சிறப்புடையவராக இருக்கிறார் என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். மதிப்பிற்குரிய நமது உலமாப்பெருமக்கள் எதற்கும் அஞ்சாத வீரர்களாக திகழ்ந் திருக்கிறார்கள். கொடுங்கோலர்களான அரசர்களுக்கு மத்தி யில் துணிவுடன் தம்கருத்துக்களை வெளியிட்டுள்ளார்கள். வீர உலமாக்களின் தீர பட்டியல்கள் வரலாற்று ஏடுகளில் நிரம்பி கிடக்கின்றன. அவைகளில் ஒரு சிலதை இங்கு நான் குறிப் பிடுகிறேன்.

அறிவுலக மேதை இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் தமது நூலான 'இஹ்யா' விலேஓர் ஆலிமின் வீர நிகழ்ச்சியை எழுதுகின்றார்கள். அவைகளை நாம் பார்ப்போம்: ஹிஷாம் இப்னு அப்துல் மாலிக் என்னும் அரசர் ஒருமுறை புனித மக்காவிற்கு வருகை தந்திருந்தார். அப்பொழுது உலமாக் களில் மிகவும் சிறந்தவர்களான அறிவுலக ஞான மேதை யாக திகழ்ந்த ஹல்ரத் தாவூஸுல் யமனிய்யி (ரஹ்) அவர் கள் புனித மக்காவில் வாழ்ந்து வந்தார்கள். அவர்களின் நற்குணப் பண்புகளையும் மற்றும் பல நல்ல நிலைகளையும் அறிந்த அரசர், தம்மை தமது இருப்பிடத்திற்கு வந்து பார்த்து செல்லவேண்டும் என அதிகாரத்தோடு அந்த ஆலிம் பெரியாருக்கு தூது அனுப்பிவைத்தார். ஆனால் அல் லாஹ்வைத் தவிர தமது இதயத்தில் யாருக்கும், எந்தப் பொருளுக்கும் இடம் தராமல் அரசருக்கும் அவரை ஆளும்

சக்கரவர்த்திக்கும் மேலாக மதிக்கப் படவேண்டிய ஒரே
யொரு இறைவனை மட்டும் தியானித்து வணங்கி வரக்கூடிய
மேதையான அவர்களுக்கு இந்த அழைப்பெல்லாம் அவ்
வளவு பெரிய விஷயமல்லவே! ஆதலால் அரசரின்
அழைப்பை அப்பெரியார் லட்சியம் செய்யாமல் இருந்து
விட்டார்கள். இருப்பினும் அரசர் தளர்ந்துவிடவில்லை. மேன்
மேலும் முயற்சித்து பலவிதமான தந்திரங்களைச் செய்து
அந்த ஆலிமை தம் இருப்பிடத்திற்கு தம் அதிகாரத்தால்
வரவழைத்து விட்டார். ஆனால் அந்த ஆலிம் அவர்கள் வந்து
அரசரின் இருப்பிடத்தில் பிரவேசிக்கும் பொழுது அரசருக்கு
சொல்வது போல் சலாம் சொல்லாமல் வெறுமென "அஸ்ஸ
லாமு அலைக்க யா ஹிஷாம்!" (ஓ! ஹிஷாமே உம்மீது
ஸலாம் உண்டாகட்டும்!) என்று கம்பீரமாகக் கூறியவர்க
ளாக உள்ளே சென்று அரசரிடம் உடல் நலம் விசாரித்து
விட்டு காலணியை அரசர் வீற்றிருக்கும் இரத்தினக் கம்பளத்
தின் ஓரமாக கழற்றிவைத்து விட்டு அரசருக்குப் பக்கத்தில்
மிக நெருங்கி உராய்ந்து கொண்டு அமர்ந்து கொண்
டார்கள்.

அல்லாமா தாவூஸுல் யமனிய்யி (ரஹ்) அவர்களின்
ஸலாமைக் கேட்டதுமே தூக்கி வாரிப்போட்டது அரசருக்கு.
மேலும், மேலும் அல்லாமா அவர்கள் செய்யும் செய்கைகள்
அனைத்துமே அரசருக்குப் பெரும் தவறாகவேபட்டது. அடுத்த
கணம், அரசர் பொறுமை இழந்தார். அவருக்கு கடுங்
கோபம் பீரிட்டுக் கொண்டு வந்தது. கை கால்கள் பதறின.
கண்கள் நெருப்பாகச் சிவந்தன. பற்களை நறநறவென்று
கடித்துக்கொண்டார். ரோமக் கால்கள் சிலிர்த்து நின்றன.
உடனே அரசர் ஆணைபிறப்பித்தார். தமது மந்திரிக்கு
"இவனை கொன்று தீர்த்துவிடு" என்ற பாவனையில் சைக்
கினை காட்டினார். ஆனால் மந்திரியின் மறுமொழி அரசருக்கு
மேலும் ஏமாற்றத்தைக் கொடுத்ததோடு கோபத்தை பன்
மடங்காக்கியது. மந்திரி அமைதியாக கூறினார். "அரசே!
தாங்கள் தங்கி இருக்குமிடம் இறையில்லமாம் கஃபத்துல்
லாஹ் என்பதை மறந்து விட்டீர்களா? இங்கு கொலை செய்
வது குற்றத்திலும் பெரும் குற்றமாயிற்றே! இங்கு இரத்



தம் ஒட்டக்கூடாது என்று அதற்குள்ளாகவா மறந்துவிட்டீர்
கள்" என்று சொல்லி ஆத்திரம் கண்ணையடைத்து கொண்
டிருந்த அரசரின் கண்களைத் திறந்து விட்டார். அரசருக்கு
இவையெல்லாம் செவியில் ஏறியதாக தெரியவில்லை. முட்ட
வந்த மாட்டிடம் வேதாந்தம் ஓதிய கதையாக அவரின் நிலை
இருந்தது. அரசர் அந்த ஆலிம் பெரியாரின் பக்கம் திரும்
பினார். 'ஏன் இப்படி நடந்து கொண்டீர்' என்று சிங்கம்
போல் கர்ஜித்தார். 'நான் எப்படி நடந்து கொண்டேன்
விளக்கம் தாருங்களேன்" என்று அல்லாமா அவர்கள் கேட்
டார்கள்.

அரசர் தொடர்ந்தார் 'இதோ சொல்கின்றேன் கேளும்,
நீர் செய்த குற்றங்களை: முதல் குற்றம்:- நீர் சற்றும் மரியா
தையில்லாமல் உமது செருப்பை எனது விரிப்பின் ஓரமாக
கழற்றி வைத்தீர், என்ன தைரியம் உமக்கு? இரண்டாவது
குற்றம்:- மற்றவர்கள் எனக்கு முன்னால் வந்து மண்டியிட்டு
அமரும் பொழுது நீர் மட்டும் என்னுடன் எனது விரிப்பில்
எனக்குச் சமமாக அமர்ந்துவிட்டீர், என்ன துணிவு உமக்கு?
மூன்றாவது குற்றம்: நீர் இங்கு வந்தவுடன் எல்லோரையும்
போல் எனது கையைப்பிடித்து முத்தமிடவில்லை. எவ்வளவு
அலட்சியம் உமக்கு? நான்காவது குற்றம்:- அஸ்ஸலாமு
அலைக்கும் யா அமீருல் முஃமினீன் என்று சொல்லாமல்
வெறுமென 'அஸ்ஸலாமு அலைக்க யா ஹிஷாம்" என்று
கூறினீர். என்ன திமிர் உமக்கு? ஐந்தாவது குற்றம்:- என்
னைப் புனைப்பெயர் கொண்டு அமீருல் முஃமினீன் என்று
அழைப்பதை விடுத்து சற்றும் மரியாதை இல்லாமல் கொஞ்
சமும் அஞ்சாமல் எனது பெயரை சொல்லி அழைத்து
விட்டீர். என்ன ஆணவம் உமக்கு? என்று படபடவென்று
ஒரே மூச்சில் பொரிந்து தள்ளிவிட்டார் அரசர்!

ஆனால் நமது அல்லாமா அவர்கள் அஞ்சாமல் அரச
ரைக் கெஞ்சாமல் அவரின் குற்றச்சாட்டுக்களுக்கு பதில்
கொடுத்தார்கள். "அரசே! கேளும், உமதுகுற்றச் சாட்டுகளின்
பதில்களையும் நான்செய்தவற்றின் காரணங்களையும், நீர் சாட்
டிய முதற் குற்றம்: 'உமது விரிப்பின் அருகாமையில் எனது
செருப்பைக் கழற்றி வைத்தேன்' என்பது. அரசே நான் ஒரு
நாளைக்கு ஐந்து தடவை இறைவனுக்கு முன்னாலேயே அவ

ன்து இல்லமாம் பள்ளி வாயிலில் எனது செருப்பை இதே போல் கழற்றி வைக்கிறேன். ஆனால் இறைவன் அதற்காக என் மீது கோபிக்கவுமில்லை. என்னைச் சாடவுமில்லை. ஆகவே அதில் தவறேதுமில்லை. நீங்கள் கூறிய இரண்டாவது குற்றம்:- எல்லோரும் செய்வது போல் நானும் உமது கைகளை பிடித்து முத்தமிடவில்லை என்பது. அரசே! ஹல்ரத் அலீ (ரலி) அவர்கள் சொல்ல நான் கேட்டிருக்கிறேன் 'முற்றிலும் நீதமான அரசர்களின் கைகளைத்தான் முத்தமிடுவது தகும். மற்றவர்களின் கைகளை முத்தமிடுவது பாவமான காரியத்தை சார்ந்ததாகும்' என்று கூறுவார்கள். ஆனால் தாங்கள் காட்டுகின்ற நீதி முற்றிலும் உண்மையானதாக எனக்குப்படவில்லை. ஆகவே உமது கையை முத்தமிட்டு அநீதிக்கு அடிமையாகிவிட நான் எண்ணவில்லை. நீர் மொழிந்த மூன்றுவது குற்றம்: எல்லோரையும் போல நானும் உம்மை அமீருல் முஃமினீன் என்று அழைக்காதது. அரசரே! கேளும்! உம்மை எல்லா முஃமின்களும் தலைவராக ஏற்றுக்கொள்ளவில்லை. சிலர் மட்டுமே ஏற்றுக் கொண்டுள்ளார்கள். ஆகவே தாங்களை அமிருல் முஃமினீன் (முஃமின்களின் தலைவர்) என்று அழைப்பதின் மூலம் பொய்யனாகிவிட நான் தயாராக இல்லை.

நீர் நவின்ற நான்காவது குற்றம்: மற்றவர்களைப் போன்று உம்மை பட்டப்பெயர் சொல்லி அழைக்காமல் உமது அசல் பெயரையே சொல்லியழைத்தது! அரசே!! கேளும்!!! அல்லாஹ் தனது பரம விரோதியான அபூலஹபை புனைப் பெயர் சொல்லியே தனது குர்ஆனிலே அழைக்கிறான். ஆனால் தனது நேசர்களான நபிமார்களை அவர்களின் அசல் பெயரையே சொல்லி யாதாவூது, யா எஹ்யா, யா ஜக்கரிய்யா, யா மூஸா, யா சுலைமான், யா இப்ருஹீம், யா இஸ்மாயீல், யா இஸ்ஹாக், யா ஈஸா என்று அழைக்கிறான். ஆதலால் நான் உமக்கு மரியாதை செய்யும் பொருட்டே அப்படி அழைத்தேன். அரசர் சுட்டிக்காட்டிய ஐந்தாம் குற்றம்:- உமக்கு பக்கத்தில் சமமாக அமர்ந்துவிட்டேன் என்பது. அரசரே! நான் உமது புத்தியை சோதிப்பதற்காகவே அவ்வாறு அமர்ந்தேன். காரணம் ஹல்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறியதை நான் ஞாபகம் வைத்திருந்தேன். ஒரு



தலைவரின் புத்தியை சோதிக்க எண்ணினால் அவருக்கு சமமாக அமர வேண்டும். அப்பொழுது அவர் கோபம் கொண்டால் அவர் பெருமையடிப்பவர், அகம்பாவி. மேலும் அவர் நரகவாதிகளைச் சார்ந்தவர் என்று முடிவுசெய்யலாம் எனக் கூறுவார்கள். அதன்படியே நான் உங்களை சோதித்ததில் நரகவாதியாகவே கண்டேன்'' என்று கூறி தமது பேச்சை முடித்துக் கொண்டார்கள்.

இவைகளனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த அரசருக்கு நடுக்கமும், திடுக்கமும் பிடித்துக்கொண்டது. ஒன்றும் புரியாமல் தடுமாறினர். உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது. அவரின் ஆணவம், திமிர் அடங்கியது. அசந்து போய் உட்கார்ந்து விட்டார்.

ஹல்ரத் அல்லாமா தாவூஸ் (ரஹ்) அவர்கள் அரசரின் அனுமதியைக் கூட எதிர்பாராமல் அரசருக்கு இவ்வாறு உபதேசம் புரிந்தார்கள். 'நீர் உண்மையான ஆட்சி செய்வீரானால் உமக்கு அல்லாஹ்வின் உதவி உண்டாகட்டுமாக. தவருக ஆட்சி செய்வீரானால் உம் உச்சிமுடியை பிடித்து அல்லாஹ் உலுப்பி நரகில் தன்ளுவானாக' என்று கூறி உடனே அவ்விடத்தை விட்டு வெளியேறி விட்டார்கள். பார்த்தீர்களா! அவர்களின் அச்சமின்மையை. அரசருக்கு முன்னால் தமது கருத்துகளை துணிவுடன் எடுத்துக்கூறி தமது வீரத்தை வெளியிட்டு தமது இல்முக்கு மதிப்பு தேடித் தந்ததை! இதேபோல் ஆயிரமாயிரம் உலமாப் பெருமக்கள் தமது கருத்துக்களை மன்னர்களுக்கு முன்னால் துணிவுடன் எடுத்துக் கூறியுள்ளார்கள். தமது கருத்துக்களை கூறும் பொழுது பல துன்பங்களுக்கு ஆளாகி உள்ளார்கள். அவர்களின் துணிவு அகிலத்தையே ஆட்டிப் படைத்தது.

இமாம் அபூ ஹனிபா (ரஹ்) அவர்களை நிதி பொறுப்பு ஏற்றுக்கொள்ளச் சொன்னபோது வேண்டாம் என்று மறுத்ததற்கு நஞ்சிட்டுக் கொல்லப்பட்டார்கள். தமது கருத்துக்களை துணிவுடன் கூறியதற்காக இமாம் ஷாபி (ரஹ்) அவர்களும் இமாம் நஸாயி (ரஹ்) அவர்களும் பல இடையூறுகளுக்குள்

ளாக்கப்பட்டார்கள். இறைவனின் சட்டத்தை மாற்ற துடித்த அரசர்களுக்கு மறுப்புக் கொடுத்ததின் காரணமாக, ஏக தெய்வக் கொள்கைக்கு துணைபோனதற்காக இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள். இமாம் ஹன்பலி (ரஹ்) அவர்கள் சவுக்கால் அடிக்கப்பட்டு பல துன்பங்களுக்குள்ளாயினர். இதேபோல்தான் இமாம் புகாரி(ரஹ்) அவர்களையும் நாட்டை விட்டே துரத்தினார்கள். இப்படியே தான் நமது உலமாப் பெருமக்கள் துன்பத்திற்குள்ளாயினர். ஆனால் அவர்கள் மனம் தளரவில்லை. ஹஜ்ஜாஜ் இப்னு யூசுப் மூலம் எத்தனையோ ஆயிரம் ஆயிரம் உலமாக்கள் ஷஹீதாக்கப்பட்டுள்ளார்கள். அண்மை காலத்தில்கூட நமது உலமாப் பெருமக்கள் செய்த சேவையையும், வீரத்தையும், அவர்கள் அடைந்த துன்பங்களையும் நம்மால் மறக்கத்தான் முடியுமா? அந்நிய ஆதிக்கத்திற்கெதிராக ஆர்த்தெழுந்த உலமாக்களை ஆங்கில ஆட்சியாளர்கள் சதிகாரர்கள் என்ற குற்றம் சாட்டி 1864-ஆம் ஆண்டில் வழக்குத் தொடர்ந்தார்கள்.

'அம்பாலா சதி வழக்கு' எனப் பிரசித்திப் பெற்ற அந்த வழக்கில் சிக்கியவர்களில் முக்கியமான உலமாப் பெருமக்கள்: மௌலானா அப்துர் ரஹீம் அஜிமாபாதி (ரஹ்), மௌலானா முஹம்மது ஜஅஃபர் தானீஸாரி (ரஹ்), மௌலானா யஹ்யா அலீ அஜிமாபாதி (ரஹ்), மௌலானா முஹம்மது ஷபீஃ லாஹுரீ, மௌலானா காஜிமியான் ஜான் ஆகியோராவார்கள். இவர்கள் 18-வருடக் காலமாக அந்தமானில் அவதிப்பட்ட பிறகு விடுதலை பெற்றார்கள். இவர்களுக்கு தூக்குத் தண்டனை கூட விதிக்கப்பட்டது. பிறகு தடைசெய்யப்பட்டது. இப்படியாக தொடர்ந்து நமது உலமாப்பெருமக்கள் தங்களின் வீரத்தை காட்டி தமது கொள்கையை நிலைநாட்டியுள்ளார்கள். உலமாக்கள் நபிமார்களின் வாரிசுகளல்லவா! எப்படி வீரம் இல்லாமல் இருக்க முடியும். வீரப் பரம்பரையில் பிறந்தவர்களல்லவா அவர்கள்! அவர்கள் புகழ் விரும்பிகளாக, பெருமை உள்ளவர்களாக, எதற்கும் தலையாட்டும் பொம்மைகளாக இருந்திருந்தால் நிச்சயமாக இந்த நிலைக்கு ஆளாகியிருக்க மாட்டார்கள். ஆகவே உண்மையான வீர வாழ்க்கை வாழ்ந்து இந்த உலகத்தில் இறைவனின் பிரதிநிதியாக செயல்பட்டு உலகில் தங்களது வீர முத்திரையை பதித்து சென்றுள்ளார்கள். இன்றும்கூட நமது உலமா பெருமக்கள் பல வகைகளில் இழிவுபடுத்தப் படுகின்றார்கள். துணிவுடன் இருந்து வீர வாழ்க்கை வாழ இறைவன் கிருபை செய்வானாக. ஆமீன்.

★



# 23. ஆலிம்களை அவமதிக்காதீர்கள்!

எனது உம்மத்தினருக்கு ஒரு சோதனை காலம் வரும். அக்காலத்தில் மக்கள், மார்க்க அறிஞர்களை (உலமாக்களை) விட்டும் அவர்களது நல்லுரைகளைக் கேட்காமல் வெருண்டோடுவார்கள். அக்காலத்தில் அல்லாஹ் அவர்களை மூன்று வகைகளில் சோதிப்பான். (1) வியாபாரத்தில் பரக்கத்தை எடுத்து விடுவான். (2) அநியாயக்கார நீதமற்ற ஆட்சியாளர்களைச் சாட்டி விடுவான். (3) மக்கள் ஈனமற்றவர்களாக மரணமடைவார்கள் என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளினார்கள். புனித இஸ்லாம் மார்க்கத்தின் முதுகெலும்புகளாகவும் வழிகாட்டியாகவும் நபிமார்களின் வாரிசுகளாகவும் சமுதாயத்தின் காவலர்களாகவும் விளங்கி கொண்டிருக்கும் சங்கைக்குரிய மார்க்க மேதைகளாம் புனித உலமாக்களைப் பற்றி தரக்குறைவாக மதித்து பேசப்பட்டு வருவதை நாம் பார்த்துக் கொண்டு தான் உள்ளோம்.

உலமாக்கள் எங்களின் உயிரினும் மேலான அறிவுப் பெட்டகங்கள். தீன் சுடர் வீசும் ஆத்மீக அறிவியல் விளக்கங்கள். மார்க்கத்தை நேராக வழி நடத்திச் செல்லும் ஆற்றல் மிக்க வீரர்கள். இத்தகைய உத்தமர்களை தரக்குறைவாக சிலர் பேசுகின்றார்கள்.

இதன் அடிப்படையில்தான் நபி (ஸல்) அவர்கள் மூன்று சோதனைகளை எடுத்து கூறினார்கள். இன்று உலமாக்களை மதிக்காததின் காரணமாகத்தான் வியாபாரத்

தில் பரக்கத்து எடுபட்டு கொண்டு இருக்கிறது. மேலும் அநியாயக்கார அரசர்கள் ஆட்சி செய்து சமுதாயத்தை கெடுக்கின்றார்கள். உலமாக்களை வெறுத்து ஒதுக்குவதின் காரணமாகவும், சரியான மார்க்க இல்மு கற்று கொள்ளாததின் காரணமாகவும் ஷைத்தான் பெரும்பாலானோர்களை வழிகெடுத்து ஈமானற்றவர்களாக மவுத்தாக்க சதித்திட்டம் தீட்டிக் கொண்டிருக்கிறான். இதுவெல்லாம் நடைமுறையில் நாம் காணும் உலகின் நிலைகளாகும். உலமாக்களை மதிக்காததின் காரணமாகவும் அவர்களின் சொல்லுக்கு மதிப்புக் கொடுக்காததின் காரணமாகவும் ஒரு மனிதனுக்கு நடந்த ஒரு நிகழ்ச்சியை பாருங்கள், ஹல்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அண்ணல் நபி (ஸல்) அவர்கள் காலத்தில் ஒரு மனிதர் இறந்து விட்டார். அந்த ஜனாஸாவைத் தொழ வைப்பதற்காக பெருமானார் (ஸல்) அவர்கள் வந்து நின்றார்கள். அந்நேரத்தில் ஜனாஸாவின் கபன் ஆட்டம் கொடுத்தது. உடனே அருமை நபி (ஸல்) அவர்கள் கபனைத் திறந்துப் பார்த்தார்கள். அங்கே கருநாகப் பாம்பு ஒன்று அந்த மையத்தின் இரத்தத்தை உறிஞ்சிக் கொண்டும், வேதனை செய்து கொண்டுமிருந்தது. இதைக் கண்ட ஹல்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் அப்பாம்பை அடிக்க முன் வந்தார்கள்.

அப்பொழுது அப்பாம்பு இறைவனின் உத்திரவு கொண்டு பேசியது. முதலில் அப்பாம்பு கலிமா கூறியது. பின்பு 'அபூபக்கரே! ஏன் என்னை அடிக்க வருகின்றீர்கள். இம்மனிதன் மூன்று குற்றங்களை செய்து இருக்கின்றான். முதலாவது இம் மனிதன் தொழுவது கிடையாது. இரண்டாவது இம் மனிதன் ஜக்காத் கொடுப்பது கிடையாது. மூன்றாவது இம்மனிதன் உலமாக்களின் பேச்சை கேட்பது கிடையாது. இம்மூன்று குற்றங்களுக்காகவே கியாமத் நாள் வரை இவனை வேதனை செய்து கொண்டிருக்கும்படி நான் ஏவப்பட்டு இருக்கிறேன்.' என்று அப்பாம்பு பதில் கூறியது. பார்த்தீர்களா! உலமாக்களின் பேச்சைக் கேட்காததின் காரணத்தினால் ஏற்பட்ட தண்டனையை!

ஏழு வருடங்கள் இஸ்லாமிய இலக்கியக் கருவூலங்களை இனிதே பயின்று அதன் இரகசியங்களையும் அறிந்து தேறி அதற்குரிய விருது சான்றுகளையும் பெற்று புனித மதரஸாக்



களிலிருந்து வெளியாகும் பெருமானார் (ஸல்) அவர்களின் வழித்தோன்றல்களான மௌலவிகளை நமது சமுதாயம் உரிய முறையில் மதிப்பதுமில்லை. அவர்களுக்கு தேவையான கௌரவத்தைக் கொடுப்பதுமில்லை. அவர்களின் மாண்பினையும், மார்க்கப் புலமையையும் சரிவர உணர்ந்து செயல்படுவதும்இல்லை. அவர்களின் கல்வியின் திறத்தையும், தரத்தையும்சரியாக பயன்படுத்திக் கொள்வதில்லை. அதற்கேற்ற வாய்ப்பும், வசதியும் அவர்களுக்கு வழங்கி ஆதரிப்பதில்லை. உலமாக்கள் என்ன வீட்டு வேலைக்காரர்களா? அல்லது ஒன்றும்தெரியாத அப்பாவிகளா? என்று கேட்கத் தூண்டும் அளவிற்கு சரியாக உலமாக்களை மதிக்காத மக்களைப் பார்த்து கேட்டாக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது.

இன்று பெரும்பாலான உலமாக்கள் புனித இறைவனின் இல்லமாம் பள்ளியில் இமாமத் செய்து தங்களது பணியை திறம்பட செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு செலுத்த வேண்டிய மரியாதையையும், கண்ணியத்தையும் கொடுக்காமல் அவர்களுக்கு போதுமான ஊதியங்களை கொடுத்து உதவாமல் பொடுபோக்காக இருப்பதை எத்தனையோ ஊர்களில் நாம் பார்த்து வருகின்றோம்.

எத்தனையோ ஊர்களில் உலமாக்களை சரியாக கவனிக்காததின் காரணமாகஅவர்களாகஊரைவிட்டே வெளியேறும் பரிதாப நிலையை பார்க்கிறோம். இன்னும் சில ஊர்களில் உலமாக்களின் பயான்களுக்கு மதிப்புக்கொடுக்காமல், பாத்திஹா, மௌலூத், ஹத்தம் மட்டும் ஓதுவதற்காக வைத்து வேலைவாங்குவதையும் பார்த்துக்கொண்டுதான் வருகின்றோம்,மேலும் சில ஊர்களில் சில காரணங்களுக்காக உலமாக்களையே கை நீட்டி அடித்து தமது கோபத்தை தணித்துக் கொள்ளும் சில ஈனப் பிறவிகளையும் பற்றி பத்திரிக்கைகளில் படித்தும் தான் வருகிறோம்.

இதற்கெல்லாம் காரணம் என்னவென்றால் அறிவு பெட்டகங்களான சத்திய உலமாப்பெருமக்களை சரிவர பயன்படுத்திக் கொள்ளாததின் காரணத்தால் ஏற்படும் விளைவுகள் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது. பரிபூரணமான மரியாதையை இந்த உலமா சமுதாயத்திற்கு எப்பொழுது தான் இந்த சமுதாயம் கொடுக்குமோ தெரியவில்லை. ஓர் ஆலிமை

ஒரு மனிதன் கெட்ட வார்த்தைகளை கொண்டு திட்டினால், அவன் குப்ரளவில் சென்று விடுவான் என்றும், அவன் மனைவி பாயின் தலாக் பெற்றவளாகி விடுகிறாள் எனவும் சில இமாம்கள் சொல்கின்றார்கள். பாவங்கள் செய்யக்கூடிய உலமாக்களைவிட ஜாஹிலானவர்கள் அந்தஸ்தில் குறைந்தவர்கள்தாம். காரணம், மனிதர்கள் பொதுவாக பலஹீனமானவர்களாகத்தான் படைக்கப்பட்டுள்ளார்கள். நபிமார்கள்தாம் பாவங்களைவிட்டும் பாதுகாக்கப்பட்டவர்கள். மற்ற மனிதர்கள் பொதுவாக பாவம் செய்ய சந்தர்ப்பங்கள் உள்ளன. உலமாக்கள் பாவங்களைவிட்டும் பாதுகாக்கப்பட்டவர்கள் என்று எப்படி சொல்ல முடியும்?

மனிதர்கள் என்ற வகையில் உலமாக்கள் வாழ்விலும் பாவங்கள் நிகழலாம். அதன் காரணமாக அவர்களை இழிவாகவும், மரியாதை இன்றியும் மட்டம்தட்டிப்பேசுவது பெரும் பாவமாகும். ஏனெனில், உலமாக்கள் இறைவனிடம் தவ்பா (பாவமன்னிப்பு) கேட்டு மீண்டு இருப்பார்கள். ஆகவே அவர்களைப் பற்றி தவறான வார்த்தைகளால் பேசி கேலி கிண்டல் செய்வது மாபெரும் குற்றமாகும். உலமாக்களை கேலி கிண்டல் செய்தும், ஏசியும், பேசியும், பழிப்பவர்களின் இறுதி நேரம் மிக தீயதாக அமைந்ததையும், அவர்கள் வாழ்வில் பரக்கத் எடுபட்டு போவதையும், இந்த இஸ்லாமிய சமுதாயம் காலகாலமாக பார்த்துக் கொண்டுதான் இருக்கிறது. பல ஆயிரம் உலமாக்களை அநியாயமாக கொன்று குவித்த ஹஜ்ஜாஜ் இப்னு யூசுபின் இறுதி நேரம் எந்த அளவு கெட்டதாக அமைந்தது என்பதை இந்த சமுதாயம் அறிந்துதான் வைத்திருக்கிறது.

குர்ஆன் குரல் துல்ஹஜ் சிறப்பிதழில் (1987) ஒரு நபர் கேள்வி கேட்டு உள்ளார். அதற்கு ஹஜரத் சரியான பதிலை தந்துள்ளார்கள். கேள்வியையும், பதிலையும் படித்துத்தான் பாருங்களேன்! கேள்வி: எங்களின் ஊரில் ஒரு நபர் எப்போதும் ஆலிம்களை குறை கூறி கொண்டே இருக்கிறார் அவரிடம் பல முறை எடுத்துச் சொல்லியும், திருந்துபவராக இல்லை. நீங்கள் கூறும் அறிவுரை என்ன?

பதில்: அவர் ஓர் ஊமைச் சிரங்கு வியாதிக்காரர். சொரிந்து கொண்டிருப்பது அவருக்கு சுகம். சொரியக் கூடாது என்று அவரே நினைத்தாலும் முடியாது, பாவம்!



ஆகவே உலமாக்களை அவமதிக்காமல் அவர்களுக்கு செலுத்த வேண்டிய கண்ணியத்தை கொடுத்து கௌரவப் படுத்துங்கள்.

✦

# 24. உலமாக்களை மதியுங்கள்! உண்மை முஸ்லிம்களாக திகழுங்கள்!

எனது இஸ்லாமிய சமுதாயமே! நபிமார்களின் வாரிசுகளான கண்ணியமிக்க உலமாப் பெருமக்களை மதியுங்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் உலமாக்களுக்கு எந்த வகையில் மரியாதை கொடுக்க சொல்லியுள்ளார்களோ, அதன் அடிப்படையில் உலமாக்களுக்கு மதிப்பு கொடுத்து அவர்களை மதியுங்கள். அலட்சிய நோக்குடன் உலமாப் பெருமக்களைக் கருதிடும் போக்கு அண்மைக் காலத்தில்தான் நிகழ்ந்தது என்று நீங்கள் எண்ணிக்கொள்ள வேண்டாம். பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இந்தப் பரிதாபம் அவர்களை தொடர்ந்து வந்துள்ளது என்பதை அறியுங்கள். உலமாக்களுக்கு கண்ணியம் செய்து அவர்களின் சொல்லுக்கு மதிப்புக் கொடுத்து அவர்களை மதித்ததன் காரணமாக எத்தனையோ பாமர மக்கள் பல அந்தஸ்துகளை அடைந்துள்ளார்கள்.

ஒரு நபர் உலமாக்கள் என்றால் மிகவும் நேசமாக நடந்து கொள்வார். உலமாக்களின் சொல்லுக்கு மதிப்புக் கொடுத்து அவர்களை மதித்து வருவார். அவர் ஒன்றும் அறியாதவராக இருந்தும் உலமாக்களை மதித்ததின் காரணமாக, இறைவன் அவரின் ஐந்து குமாரர்களையும் ஆலிம்களாக மாற்றி சமுதாயத்தின் புனித தீன் சேவையை செய்ய வாய்ப்பளித்தான். இது உண்மைச் சம்பவம். உலமாக்களை மதித்த ஒரே காரணத்தினால்தான் அவரின் ஐந்து மகன்களையும் ஒன்றன்பின் ஒன்றாக ஆலிமாக மாற்றி அவரின் தராஜாக்களை உயர்த்தினான் வல்ல இறைவன் என்றால் உலமாக்

களின் சிறப்புகளையும், அவர்களின் மகிமைகளையும் நம்மால் விவரித்து கூற முடியுமா?

அரசர் அக்பரிடம் விகட கவியாக இருந்த பீர்பால் என்ற அறிஞர், அக்பரை விட்டுப் பிரிந்து வேறு வேலை தேடி அலைந்து கொண்டிருந்தார். பல நாட்கள் வறுமையில் வாடி வதங்கிய பின்னர் ஒரு ஜமிந்தாரின் மகனுக்கு கல்வி போதிக்க ஓர் ஆசிரியர் தேவை என்பதைக் கேள்விப்பட்டு அந்த ஜமின்தாரிடம் சென்றார். அந்த ஜமீந்தார், ''நான் என் மகனுக்கு கல்வி கற்பிக்க வருபவர்களுக்கு உணவும், ஒன்றரை ரூபாய்சம்பளமும் கொடுப்பது வழக்கம். உமக்கு வேண்டுமானால் மாதம் இரண்டு ரூபாய் சம்பளம் தருகி றேன்'' என்று கூறினான்.

இதைக் கேட்டதும் பீர்பாலுக்கு ஆத்திரமும் அடங்காத கோபமும் வந்தது. எனினும் அடக்கிக்கொண்டு சுற்று முற்றும் கண்ணோட்டமிட்டார். அங்கே ஒரு குதிரைப்பாகன் நின்று கொண்டிருந்தான். அந்த குதிரைப் பாகனை சுட்டிக் காட்டி, ஜமீந்தாரை நோக்கி ''நீங்கள் அந்தக் குதிரை பாக னுக்கு எவ்வளவு சம்பளம் கொடுக்கிறீர்கள்?'' என வின வினார். ஜமிந்தார் ''ஏதோ மாதம் பதினைந்து ரூபாய் கொடுக்கிறேன்.'' என்று கூறினான். பீர்பால் 'ஜமிந்தாரே! நீங்கள் உங்கள் மகனுக்கு குதிரைப் பாகன் வேலையையே கற்றுக் கொடுங்கள், ஏனெனில், பாவம் பத்து பதினைந்து வருடம் கல்வியைக் கஷ்டப்பட்டுப் படித்தபிறகு உம் மக னுக்கு மாதம் இரண்டு ரூபாய்தான் சம்பளம் கிடைக்கும். ஆனால்குதிரைப்பாகன் வேலையை அவனுக்கு கற்றுக்கொடுத் தால்மாதம் பதினைந்து ரூபாயாவது சம்பளம் கிடைக்கும்.'' என்று பதிலளித்தார். இந்த பதிலைக் கேட்டதும் ஜமிந்தார் தனது கஞ்சத்தனத்தை உணர்ந்து வெட்கப்பட்டான். இந்த நிகழ்ச்சியில் சில படிப்பினைகள் பொதிந்து உள்ளன. சிந் தித்து செயல்பட முன் வாருங்கள்.

ஆகவே உலமாக்களுக்கு உயரிய மரியாதையை கொடுங்கள். அவர்களை மதியுங்கள். அவர்களின் முஹிப்பு களாக மாறுங்கள். உலமாக்களின் உண்மை நண்பர்களாக



சிறந்த பொதுமக்களாக திகழுங்கள். உண்மையான முஸ்லீம் களாக திகழ உலமாக்களை நேசியுங்கள். அவர்களின் சொல் லுக்கு மதிப்புக் கொடுங்கள். அவர்களின் சிபாரிசு பெறக் கூடிய உண்மை முஸ்லிம்களாக திகழுங்கள். உலமாக்க ளோடு சேர்ந்து ஓரணியில் திரண்டு உயிரினும் மேலான உன்னத இஸ்லாத்தை காப்பாற்ற முன் வாருங்கள். இறை வன் நம் அனைவரையும் நல்லடியார்களின், உண்மை சீதே விகளின் கூட்டத்தில் சேர்ப்பானாக. ஆமீன்!

ஸல்லல்லாஹு அலா முஹம்மது ஸல்லல்லாஹு

அலைஹிவஸல்லம். வஸ்ஸலாம்.

★

## 25. சமுதாயம் சிந்திக்க வேண்டும்!

தற்காலத்தில் இமாமத் மற்றும் மார்க்கக் கல்வி பயிற்று வித்தல் போன்ற மார்க்க சேவையாற்றுவதில் திறமையான ஆலிம்கள் குறைந்துவிட்டனர். அப்படியே சேவையாற்றுவதி லும் உலக ஆதாயங்களை அலசிப் பார்க்காமல் தியாக, மற்றும் கடமை உணர்வோடு செயலாற்றுவோர் அரிதாகவே உள்ளனர். பெரும்பாலோர் வியாபாரம், விவசாயம், வெளி நாடு செல்லுதல் போன்ற உலகத்தொழில்களில் மூழ்கி தாங் கள் கற்ற கல்விக்கே பங்கம் ஏற்படுத்தி விடுகின்றனர் என்று இன்றைய இஸ்லாமிய உலகம் ஆலிம்களை நோக்கி அதி ருப்தி தெரிவிக்கின்றது.

தீன் பணி செய்வதற்கென்றே மார்க்கக் கல்வியைக் கற் கும் ஆலிம்கள் கற்று முடிந்ததும் அந்தப் பணியை விட்டும் முழுதும் ஒதுங்கிக் கொள்வது ஏன் என்று சமுதாயம் சற்று ஆராயுமேயானால் அதற்கு சில காரணங்கள் விடையாகக் கிடைக்கும்.

பொதுவாகவே ஓதி முடித்ததும் அதிகமான ஆலிம்களைத் தவிர்க்க முடியாத இரு கடமைகள் எதிர் நோக்குகின்றன.

ஒன்று, ஒவ்வொரு காரியத்திலும், தன் ஊதியத்தையே நம்பி வாழும் அவருடைய பெற்றோர், மனைவி, மக்கள், உற்றார், உறவினர் இவர்களை எவ்வாறாவது காப்பாற்ற வேண்டுமே என்ற கடமை உணர்வு. மற்றொன்று அல்லாஹ் ரஸூலுடைய கட்டளைப்படி தான் கற்ற கல்வியைப் பிறருக்கும் போதிக்க வேண்டுமே என்ற கடமையுணர்வு.

இவ்விரு கடமைகளில் இரண்டாவது கடமையாகிய சமுதாய சேவையை மட்டுமே ஆலிம்கள் முழுமையாகச் செய்ய வேண்டும் என்று சமுதாயம் எதிர் பார்க்கிறது. எனவேதான் பள்ளி, மற்றும் மதரஸாவிலேயே இருக்க வேண்டும். வேறு எந்த துணைத் தொழிலும் செய்யக் கூடாது என்று கட்டளையும் இட்டிருக்கிறது சமுதாயம். ஆனால் குடும்பம், மற்றும் சமுதாயப் பிரச்சினைகளில் சிக்குண்ட ஆலிம் ஒரு தீர்க்கமான முடிவிற்கு வந்து தீன்பணி செய்து அதன் வருவாயைக் கொண்டு 'தம் குடும்பத்து அங்கத்தினர்களை நிச்சயம் வாழ வைக்க முடியாது எனத் தெரிந்த பின்பு தீன் பணியை முழுவதுமாக விடும் பொழுதோ அல்லது அப்பணியோடு ஏதாவது ஒரு துணைத் தொழில் (SIDE BUSINESS) செய்ய முனையும் பொழுதோ குடியே மூழ்கி விட்டதுபோல் அந்த ஆலிமைப் பார்த்து சமுதாயம் குறை கூற முற்படுகிறது. நாவு கூசாமல் ஆலிம்களைக் குறை கூறும் சமுதாயம் அவர்களின் நல்வாழ்விற்கு ஏதாவது மாற்று உதவியாவது செய்கிறதா என்றால் நிச்சயம் எதுவும் கிடையாது.

அத்தோடு சமுதாயம் ஆலிம்களுக்குக் கொடுக்கும் கண்ணியம் கூட பெயரளவிலே தான் உள்ளது. ஆலிம்களுக்கு பணத்தாசை எதற்கு என்று கேட்கும் சமுதாயம், ஓர் ஆலிமின் ஒழுக்கம், இறை பக்தி, நம்பிக்கை, நாணயம், இவைகளைவிட பணத்திற்கே முதலிடம் தருகிறது. ''பள்ளிகளிலும், மதரஸாக்களிலும் வேலை செய்யும் ஒன்றுமில்லாத ஓர் ஆலிமிற்கா என் மகளை மனைவியாக்குவேன்?'' என்று ஏளனம் பேசுகின்ற இந்தச் சமுதாயம்-முக்கியத்துவம் கொடுப்பது கல்விக்கா...? இல்லை பணத்திற்குததான்.



இவ்வாறு ஆலிம்களுக்குரிய கண்ணியத்தையும் சமுதாயம் கொடுப்பதில்லை. அவர்களின் நல்வாழ்விற்கும் வழி வகுப்பதில்லை. எனவேதான் புனிதமான தீன் பணியிலிருந்து அதிகமான ஆலிம்கள் ஒதுங்கிக் கொள்கின்றனர். எனவே, ஆலிம்கள் முழுமையான தீன் பணிக்குத் தங்களை அர்ப்பணிக்க வேண்டுமென்று சமுதாயம் எதிர்பார்க்குமேயானால் அவர்களுக்காகப் பின் வரும் மூன்று பொறுப்புகளில் ஒன்றை சமுதாயம் ஏற்றிட வேண்டும்.

1. அவர்களின் குடும்ப தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்யுமளவு, தற்கால விலைவாசிக்கேற்ப ஊதியம் தரவேண்டும்.

2. அல்லது, அவர்களின் குடும்பத்தினர்களுடைய திருமணச் செலவு, குழந்தைகளின் கல்விச் செலவு, மருத்துவச் செலவு போன்ற அத்தியாவசிய செலவுகளுக்கு சமுதாயம் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

3. அல்லது, பணிநேரத்தில் (WORKING HOURS) மட்டும் தீன் பணிபுரிந்து விட்டு, மற்ற நேரத்தில் வேறு துணைத்தொழில் புரிய ஆமோதித்தல்-ஆதரித்தல் வேண்டும்.

இம்மூன்று பொறுப்புக்களில் ஒன்றை சமுதாயம் ஏற்றுக் கொண்டால் ஆலிம்கள் தங்களை முழுமையாக சமுதாயப் பணிக்கு அர்ப்பணிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில், அது அவர்களின் முக்கிய கடமையான குடும்பப் பிரச்சினையைத் தீர்க்க வழி வகுப்பதால் ஆலிம்கள் தங்களின் முழு நேரத்தையும் சமுதாயத்திற்காக அர்ப்பணிக்கத் தயங்க மாட்டார்கள்.

ஆனால்.. ஆலிம்களின் குடும்பப் பிரச்சினையைப் பார்க்காமல், நாள் முழுதும் தீன் பணி செய்து கிடப்பது மட்டுமே அவர்களின் கட்டாய கடமை என்று நினைக்கும் நம் சமுதாயம். இம்மூன்று பொறுப்புகளில் ஒன்றை ஏற்றுக் கொள்ளுமா?

நன்றி :

''அஷ் ஷரீஅத்துல் இஸ்லாமியா''